# புதிய ஜனநாயகம்



தேர்தல் புறக்கணிப்பு சிறப்பிதழ் – 1



## ஓட்டுப் போடாதே! சாத்தானுக்கு அதிகாரம் தராதே!

படிப்பகம்

www.padippakam.com

# பொன்விழா காணும் பீ(டை)டயாதிபதி!



**ஸ்ரீ** காஞ்சி காமகோடி பீடத்தின் 69-வது மடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அசாதாரணமான ஒரு மகாபுருஷர். பொதுமக்கள் மீது அவர் காட்டும் அளவற்ற அக்கறைக்கு ஈடானது அவருக்கே உரிய எளிமை குணம்.

'பெரியவாள்' என்று நேசத்தோடு அழைக்கப்படும் ஜகத் குரு ஸ்வாமிகள் கடந்த 50 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக் கான கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து நம் நாட்டை முழுவதி லும் மூன்று முறை வலம் வந்துள்ளார்.

"50 வருடங்களாக நான் மடாதிபதியாக இருந்து வருகி றேன் என்பது ஒரு பெரும் பொருட்டல்ல. அதைவிட முக்கியம் நமது மக்களுக்காக என்னென்ன செய்யப்பட்டுள்ளது என் பதே." - என்பது பெரியவாளின் அருள்வாக்கு.

ஜகத்குரு ஸ்வாமிகளால் பல்லாயிரக்கணக்கான கும்பாபி ஷேகங்கள் செய்யப்பட்டுள்ளன; அவற்றில், நம் நாட்டின் பழ மையை பறைசாற்றும் பல கோயில்கள் அடங்கும். சமுதாய நலத்தில் கோயில்கள் ஆற்றும் சமூக, பொருளாதார பங்கை அவர் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை.

அவருடைய காலத்திலேயே நாமும் வாழ்ந்து, அவருடைய கருணை வடிவத்தை நேரில் கண்டு, அவருடைய ஆசிகளுக்கு பாத்திரமாயுள்ள நாம் பாக்கியசாலிகள்.

ஆம், நாம் அனைவரும் பாக்கியசாலிகள். நமது பாரத தேசமும் பாக்கியம் அடைந்ததே.

**"காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பீடாரோஹண ஸ்வர்ண ஜெயந்தி மகோத்ஸவ டிரஸ்ட்," 31.03.2004 அன்று நாளிதழ்களில் வெளியிட்ட விளம்பரத்திலிருந்து....**

# புதுப் பெரியவாள் போற்றி!

குந்துவதற்கு ஒரு பீடமோ
ஏந்துவதற்கு தண்டமோ
நமஸ்கரிக்க பக்தர் கூட்டமோ
கனகாபிஷேகம் செய்துவைக்க
ஒரு பாலபெரியவாளோ
இல்லாத மாமுனிவர்
இந்தப் பெரிய வாள்.

வயலே பாயாய் வரப்பே தலையணையாய்
வாழ்ந்த வள்ளலாரை விஞ்சும் எளிமை
பசியால் குடல் வெந்த போதும்
வாய்திறந்து ஒரு கவளம்
சோறு கேட்க மறுக்கும் தகைமை
பாராட்டையும் வசவையும்
ஒன்றுபோல் கருதும் ஞானம்!

அவரவர்க்கு விருப்பமான பெயர்களால்
அழைக்கப்படும் இந்தப் பெரியவாள்,
வெயிலோ மழையோ
பனியோ குளிரோ
இறைவன் தந்த தோலே ஆடையாக
செருப்பணியாக் காலே வாகனமாக
இந்தத் தேசத்தைப்
பல்லாயிரக்கணக்கான முறை
வலம் வந்திருக்கிறார்;
கல்லடிக்கும் சொல்லடிக்கும் கலங்காமல்
தனது ஆன்மீகப் பயணத்தை
அன்றாடம் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

நாடெங்கும் பரவிக் கிடக்கும்
கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள்
என மதவேறுபாடின்றி
எல்லாப் புண்ணியத் தலங்களிலும்
மக்களின் ஆன்ம மலத்தை அகற்ற
அல்லும் பகலும் அரும்பாடுபடுபவர்.

ஜாக்ர, ஸ்வப்ன, ஸுஷுப்தியெனும்
விழிப்பு - கனவு - உறக்க நிலை கடந்த
ஆதி அந்தமில்லா
இந்த மாமுனிவரின் பரம்பரையை
நமஸ்கரிப்போம்!

—இங்ஙனம்
பெரியவாளின் ஆசியை என்றென்றும்
வேண்டி நிற்கும் பக்தகோடிகள்.

**இந்தப் புதுப் பெரியவாளின் திருமுகத்தைத் தரிசிக்க.... பக்கத்தைப் புரட்டுங்கள்.**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 6**

ஏப்ரல் 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.


# ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!

முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு அதிஉயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அனல் பறக்கும் பிரச்சாரப் போருக்கு மத்தியில் நாடாளுமன்றத்துக்கான 2004 பொதுத்தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அதுதான் உண்மை என்று மக்கள் நம்பி விடுவார்கள் என்கிற ஜெர்மன் பாசிச கோயபல்சு பாணியை ஆர்.எஸ்.எஸ். -பா.ஜ.க.-அ.தி.மு.க. மற்றும் சிவசேனா அடங்கிய இந்துமதவெறி பாசிஸ்டுகள் முழு வீச்சோடு பின்பற்றுகிறார்கள். நாட்டையே பின்னோக்கிய இருளில் மூழ்கடித்துக் கொண்டு ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற வக்கிரமான பொய்மையில் ஆழ்த்துகிறார்கள். அதேபோல நாட்டையே மறுகாலனியாக்கும்-மறு அடகு வைக்கும் தனியார்மயம்-தாராளமயம்-உலகமயமாக்கம் என்னும் புதிய பொருளாதாரக் கொள்கையை மூர்க்கமாகப் புகுத்திக் கொண்டே, அந்நியனின் ஆதிக்கத்துக்குள் நாடு சிக்கி விடும் ஆபத்து சூழ்ந்திருப்பதாக பாசாங்குப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

உண்மையில் நாடு வேறுவகையான பேராபத்தை எதிர்நோக்கியுள்ளது. அதாவது நாட்டையே பார்ப்பன-பாசிச பயங்கரவாத ''சாம்ராஜ்யமாக'' மாற்றுவதற்கான ஏற்பாடுகள் அரங்கேறி வருகின்றன. வரவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. அணியினரைத் தோற்கடித்து, மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுப்பதன் மூலம் பாசிச ''வகுப்புவாத சக்தி''களை முறியடித்துவிட முடியும் என்று தேர்தல் களத்தில் அதன் எதிரணியான காங்கிரசு-போலி கம்யூனிஸ்டு-தி.மு.க. ஆகியவை வீண் பிரமையை விதைத்து வருகின்றன.

ஆனால், அது அப்படி முடியாது. ஏனெனில், ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. அணி என்பது வெறுமனே இன்னொரு ஓட்டுக்கட்சியல்ல. அடிமுதல் முடிவரை ஆயுதபாணியாக்கப்பட்ட பாசிச பரிவாரங்களை கட்டியிருக்கிறது. பார்ப்பன-பனியா நலன்களுக்காகத்தான் என்றாலும் தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் உட்பட சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகள் மத்தியிலும் ஊடுருவியிருக்கிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கோடி கோடியாக நிதி திரட்டிக் குவித்து வைத்திருக்கிறது. வெளிநாடுகளிலும், இசுரேலிய ஜியோனிச-அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு பெற்றுள்ளது. இப்பாசிச அணியை நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே மக்களைத் திரட்டி கீழிருந்து தாக்கி வேரறுக்க வேண்டியுள்ளது.

இந்தப் பணியின் ஒரு பகுதியாக ''புதிய ஜனநாயகம்'' ஏட்டின் 2004 ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரு இதழ்களும் தேர்தல் புறக்கணிப்புச் சிறப்பிதழாகத் திட்டமிட்டு வெளிவருகின்றன. அதன் அடிப்படையில் நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்புகள் மீது அவநம்பிக்கை கொண்டுள்ள மக்களிடையே மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வீண்முயற்சியாக தேர்தல் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் செய்யப்படும் சில சில்லறை நடவடிக்கைகள்; மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வாக்காளர்கள் முன் நிறுத்தப்படும் வேட்பாளர்களின் யோக்கியதை; வாக்களிக்கும் உரிமை மட்டுமே ஜனநாயகம் என்ற பிரமையில் ஆழ்த்தப்படுவதற்கு மாறாக, நிலவும் போலி ஜனநாயகம் என்பதை அம்பலப்படுத்தி உண்மை ஜனநாயகம் இதுதான் என்று புதிய ஜனநாயகத்தை முன்நிறுத்துவது; நாட்டில் உண்மையில் அதிகாரம் செலுத்துவது அதிகாரவர்க்கம், இராணுவம், போலீசு மற்றும் ''நீதித்துறை'' அதிகாரிகள்தானே தவிர மக்கள் பிரதிநிதிகள் அல்லவென்று நிரூபிப்பது; எத்தனை தேர்தல்கள் வந்து போனாலும் ஓட்டுக் கட்சிகள் வாக்காளர்களுக்குத் தரும் வாக்குறுதிகள் நிறைவேறுவதும் கிடையாது, காரணம் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார ஒழுங்கமைப்பைத் தூக்கியெறியாமல் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேறாது; ஆகிய கட்டுரைகள் இந்த ஏப்ரல் மாதத் தேர்தல் புறக்கணிப்பில் இடம் பெற்றுள்ளன.

இன்னும் ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் கூத்துகள், தேர்தல் ஆணையத்தின் கையாலாகாத்தனம், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டியதன் அவசியம்; மாறாக மக்கள் சர்வாதிகார மன்றத்தை நிறுவுவது, அதை அடைவதற்கான வழிமுறைகள் போன்றவை வரும் மே தேர்தல் புறக்கணிப்பு இதழில் இடம் பெறும். இவ்விரு இதழ்களும் இன்றைய அரசியல் சூழலில் புரட்சிகரச் சக்திகள் ஆற்றும் களப் பணிகளுக்குத் தக்க அரசியல் ஆயுதங்களை வழங்கும்!

www.padippakam.com

# போலி ஜனநாயகத்தின் இந்திய அவதாரம்

நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை மக்களுக்கானது; மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது; மக்களினுடையது என அதன் உன்னதத்தை, முதலாளித்துவ அறிஞர்கள் நறுக்கென்று குறிப்பிடுவதை நாம் அனைவரும் கேள்விப்பட்டிருப்போம்.

ஓட்டுப் போடும் உரிமை இருப்பது தான் மிகப் பெரிய ஜனநாயகம் என்று மக்களும் ஜனநாயகத்தை ''நறுக்கென்று தான்'' பார்க்கிறார்கள். ஓட்டுப் போடுவதோடு தங்களின் ஜனநாயகக் கடமை முடிந்துவிட்டதாகக் கருதிக் கொள்கிறார்கள். தங்களின் உடனடி நலன்களைப் பறிக்காத அரசுதான் நல்ல அரசு என்று பாமரத்தனமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உடனடி நலன்களைத் தாண்டி, தங்களால் 'தேர்ந்தெடுக்கப்படும்' அரசின் பொருளாதாரக் கொள்கை என்ன? அதை யார், எப்படி தீர்மானிக்கிறார்கள்? அதனால் யார் பெரிதும் பலன் அடைகிறார்கள்? என்பது பற்றியெல்லாம் பெரும்பாலும் சிந்திப்பதில்லை.

ஓட்டுக் கட்சிகளும், அதிகாரிகளும் பணக்காரர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறார்கள் எனப் பொதுமக்கள் அடிக்கடி குறைபட்டுக் கொண்டாலும், அரசும், அதிகார வர்க்கமும், ஓட்டுக் கட்சிகளும் வர்க்கச் சார்போடுதான் நடந்து கொள்ளும் என்பதைப் புரிந்து கொள்வதில் அவர்கள் தடுமாறுகிறார்கள். தங்களின் சலுகைகளை / உரிமைகளைப் பறிக்கும் ஆளுங்கட்சிக்கு வாக்களிக்காமல், எதிர்க்கட்சிகளுக்கு ஓட்டுப் போடுவதன் மூலம் அவர்களைத் தண்டித்து விடலாம் என்று இலவு காத்த கிளியாக வாழ்கிறார்கள். ஓட்டைத் தங்களின் கையில் உள்ள ஆயுதமாக நம்புகிறார்கள். அதேசமயம், ஓட்டுக் கட்சிகளோ, அந்த ஓட்டை எப்படி மக்களிடமிருந்து பிடுங்குவது என்பதில் கைதேர்ந்த கில்லாடிகளாக உள்ளன.

இலவச மின்சாரம் கேட்டு விவசாயிகள் போராடியபொழுது, அவர்கள் மீது போலீசை ஏவிவிட்டு ஒடுக்கியவர் ஜெயா. ஆனால், இப்பொழுது, தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, மீண்டும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என நாடகமாடுகிறார்;

போலீசை ஏவிவிட்டு போராட்டத்தை ஒடுக்கியதைவிட, ஜெயாவின் இந்தத் திடீர் கருணை மக்களை மிகக் கேவலமாக அவமானப்படுத்துகிறது. ஆனால், அவரோ, மக்கள் பழசையெல்லாம் மறந்துவிட்டு, தான் வீசியெறிந்த இந்த எலும்புத் துண்டுகளுக்காகத் தனக்கு ஓட்டுப் போடுவார்கள் என்ற மமதையோடு தமிழகத்தைச் சுற்றி வருகிறார்.

கருணாநிதியோ, ஜெயா ஆட்சியை மக்கள் அனுபவித்துவிட்டார்கள். எனவே, இந்தத் தேர்தலில் மக்களுக்குத் தன்னை விட்டால் வேறு போக்கிடம் இல்லை என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தை நடத்துகிறார்.

கருணாநிதியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பா.ம.க.வும், போலி கம்யூனிஸ்டுகளும், காங்கிரசும் தாங்கள் போன தேர்தலில் ஜெயாவுடன் கூட்டுச் சேர்ந்ததை மக்கள் பெரிதுபடுத்த மாட்டார்கள் என நம்புகிறார்கள்.

இப்படி ஓட்டுக் கட்சிகள், மக்களை, எதையும் ஆராய்ந்து பார்க்கும் அறிவில்லாதவர்களாக; மான, அவமான உணர்ச்சியற்ற ஓட்டுப் போடும் இயந்திரங்களாகப் பார்க்கும் துணிவு, அவர்களுக்கு எங்கிருந்து வருகிறது?

●●●

இதற்கு வரலாற்று ரீதியான காரணங்களும் உண்டு. நவீன ஜனநாயகத்தின் பிறப்பிடமான ஐரோப்பாவில், அக்கண்டத்து மக்கள் மன்னராட்சிக்கு எதிராக நடத்திய புரட்சிகரப் போராட்டங்களின் மூலம் ஜனநாயக உரிமைகளை அடைந்தனர். முடியாட்சிக்கு எதிரான போராட்டம் மிகத் தீவிரமாக நடந்த பிரான்சில், அப்போராட்டத்தின் முன்னணியில் நின்ற தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ முடியாட்சிக்குப் பதிலாக சமூகக் குடியரசு வேண்டும் என்று கோரியது.

இப்போராட்டத்தின் இறுதியில், முதலாளித்துவ முடியாட்சி வீழ்ந்தாலும், அதனிடத்தில், மக்களின் பெயரால் முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் ஆட்சி செய்யும் முதலாளித்துவக் குடியரசு தான் ஏற்பட்டது. பொது வாக்குரிமையை அறிவித்ததன் மூலம், ''மக்களாட்சி'' என்ற மாயை ஏற்படுத்தப்பட்டது.

அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட முதலாளித்துவ வர்க்கம், ஜனநாயகத்தை வெட்டி குறுக்கினாலும், தனிநபர் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் அமைக்கும் உரிமை,

நாடார் சாதியினரின் ஓட்டுக்களை அனுதாபத்தால் வாங்கிட முயலும் திருச்செந்தூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ராதிகா செல்வி.





படிப்பகம்

www.padippakam.com

கல்வியுரிமை, மதச் சுதந்திரம், கூட்டம் நடத்தும் உரிமை ஆகிய அடிப்படை மனித உரிமைக்ள் கிடைப்பதற்கு, முடியாட்சியை எதிர்த்து நடத்தப்பட்ட இந்தப் புரட்சிகரப் போரட்டங்கள்தான் காரணமாக அமைந்தன.

ஐரோப்பாவைப் போலன்றி, இந்தியாவில் நாடாளுமன்றம், நேரடி வாக்குரிமை, தேர்தல், அதிகார வர்க்கம் போன்ற முதலாளித்துவ நிறுவனங்கள் - மரபுகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளால், அவர்களின் காலனி ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக 'அரசியல் சீர்திருத்தங்களாக'ப் புகுத்தப்பட்டன.

இந்தியா, உண்மையிலேயே சுதந்திரமடைந்த நாடு என்றால், அது சுதந்திரமடைந்த பொழுது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உருவாக்கியிருந்த இந்தக் காலனிய அரசு நிறுவனங்களைக் கலைத்திருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ வேறு.

● ஆங்கில ஏகாதிபத்தியத்தால் விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்புவதற்காகக் கொண்டு வரப்பட்ட 1935-ஆம் ஆண்டைய இந்திய அரசியல் சட்டம்தான், 'சுதந்திர' இந்தியாவின் அரசியல் சாசனச் சட்டத்தின் அடிப்படையாக அமைந்தது.

● காலனி இந்தியாவை ஆள்வதற்கு உருவாக்கப்பட்ட ஐ.சி.எஸ்., அதிகார வர்க்கம்தான் சுதந்திர இந்தியாவில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகார வர்க்கமாக மறு அவதாரம் எடுத்தது.

தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமை மறுக்கப்பட்டதோடு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரத்தை மைய அரசு வைத்துக் கொண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் துப்பாக்கி முனையில் காலனி இந்தியாவை ஒருங்கிணைத்தது என்றால், இப்பொழுது துப்பாக்கி முனையில் தேசிய ஒருமைப்பாடு நிலைநிறுத்தப்படுகிறது.

- சுருக்கமாகச் சொன்னால், 1947 ஆகஸ்டு 15-இல் ஆட்கள் மாறினார்களேயொழிய, சமூக பொருளாதாரத்தில், ஆட்சி முறையில் - நீதி - நிர்வாக முறையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஜனநாயகத்திற்கு அடிப்படையான சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, மதத்தையும் அரசியலையும் பிரிப்பது; நிலச் சீர்திருத்தம், தேசிய இனங்களுக்குச் சுய நிர்ணய உரிமை ஆகிய சமூக மாற்றங்கள் எதுவுமே இந்தியாவில் நடைபெறவில்லை. அதேசமயம், முன்னாள் சமஸ்தான மன்னர்களின் வாரிசுகளும், சாதிப்



சமாஜ்வாதி கட்சித் தலைவர்கள் முலயம்சிங் (வலது ஓரம்), அமர் சிங் (நடுவில்) முன்னிலையில், அக்கட்சியில் சேரும் முன்னாள் நடிகை ஜெயபிரதா: ஓட்டை வளைக்க சினிமா கவர்ச்சி.

பிரமுகர்களும் இந்த 'ஜனநாயகத்' தேர்தலில் போட்டியிட்டு வென்று, எம்.பி., எம்.எல்.ஏ., அமைச்சர்களாக வலம் வருகின்றனர். தமிழகத்தின் பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் மேல்சாதி ஆதிக்க சக்திகள் ஜனநாயகத்தையும், தேர்தலையும் கேலிக் கூத்தாக்கி வருகின்றன.

''ஓட்டுக் கட்சிகள்தான் சாதி பார்த்து வேட்பாளர்களை நிறுத்துகின்றன; அதனால், மக்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விடுகிறது'' என யாரும் சப்பைக் கட்டு கட்ட முடியாது. ''நம்ம சாதிக்காரன் ஜெயிச்சு வந்தா நமக்குத்தான் நல்லது'' எனறு வாக்காளர்களும் சாதிப் பெருமையில் மயங்கிப் போய்க் கிடக்கிறார்கள். எந்தெந்த சாதி ஓட்டு, எந்தெந்த கட்சிக்குக் கிடைக்கும் என்ற பத்திரிகைகளில் வெளியாகும் புள்ளி விவரங்கள் ஜனநாயகத் தேர்தலுக்கும், பிற்போக்கு சாதி கட்டுமானத்துக்கும் இடையில் உள்ள உறவை அப்பட்டமாகவே அம்பலப்படுத்துகின்றன.

சாதியைப் போலவே மதமும் இந்திய அரசியலில் முக்கியப் பங்காற்றுகிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாடாளுமன்றத்தில் வெறும் இரண்டு இடங்களை மட்டுமே கொண்டிருந்த பா.ஜ.க.விற்கு கடந்த நாடாளுமன்றத்தில் 182 இடங்கள் இருந்தன; இந்து மதவெறியைத் தூண்டிவிட்டுத் தானே அக்கட்சி நாடாளுமன்றத்தில் இத்தனை நாற்காலிகளைக் கைப்பற்றியிருக்கிறது?

சாதிக்கும், மதத்துக்கும் மயங்காத ஓட்டுக்களுக்கு வேறு வலைகள் வீசப்படுகின்றன. நகரத்து உதிரித் தொழிலாளர்களின் ஓட்டுக்கள் பணத்துக்கும், எவர்சில்வர் குடத்துக்கும், குவார்ட்டர் பாட்டிலுக்கும் விலை பேசப்படுகின்றன. மனசாட்சிப்படி ஓட்டுப் போடும் கனவான்களின் ஓட்டுக்கள் கவர்ச்சித் திட்டங்களால் வீழ்த்தப்படுகின்றன.

ஏழைகளைக் குறிவைக்கும் இலவச வேட்டி - சேலை, ரேசன் அரிசி விலை குறைப்பு போன்றவை மட்டும் கவர்ச்சித் திட்டங்கள் அல்ல; தேர்தல் சமயத்தில் அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டுவதும்; வருமான வரி வரம்பை உயர்த்துவதும்; சமையல் எரிவாயு விலையை உயர்த்த மாட்டோம் என அறிவிப்பதும் கூட கவர்ச்சித் திட்டங்கள் தான்.

இதற்கும் மயங்காதவர்களை வீழ்த்த இருக்கவே இருக்கிறது சினிமா கவர்ச்சி. ராமாயணத் தொடரில் ராமர், சீதை, ராவணனாக நடித்த நடிகர் - நடிகைகள், அதே வேடத்தில் தேர்தல் களத்தில் குதித்த பெருமை கொண்டதுதான் இந்திய ஜனநாயகம்.

அனுதாப அலை வீசும் சூழல் உருவானால், கவர்ச்சியைவிட, கண்ணீரே ஓட்டுக்களை அள்ளித் தரும் ஆயுதமாகிவிடும். தமிழக போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட அரசியல் ரவுடி வெங்கடேச பண்ணையாரின் மனைவி ராதிகா செல்வி, நாடார் சாதி ஓட்டுக்களை அனுதாபத்தால் வாங்கி திருச்செந்தூர் தொகுதி எம்.பி. ஆகிவிட முயலுகிறார் என்றால், மக்களின் ஓட்டைத் தீர்மானிப்பது ஜனநாயக உணர்வா? இல்லை,



படிப்பகம்

கவர்ச்சி, அனுதாபம், விசுவாசம் போன்ற அற்ப உணர்வுகளா?

•••

பொதுமக்கள் பாமரத்தனமாக எண்ணிக் கொண்டிருப்பதுபோல நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது மக்களாட்சிக்கான நிறுவனம் அல்ல; நாடாளுமன்றம் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சிக்கான கருவி. அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமையாக உறுதி செய்யப்பட்டுள்ள சொத்துரிமையின் மூலமும்; முதலாளிகள் - ஓட்டுக் கட்சிகள் - அதிகாரிகள் இவர்களுக்கு இடையே உள்ள உறவின் மூலமும்; இரட்டை ஆட்சி முறையின் மூலமும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி நடைபெறுகிறது. தேர்தலும், அனைவருக்கும் வாக்குரிமையும் இந்த உண்மையை திரைபோட்டு மறைத்து, மக்களாட்சி என்ற மாயையை ஏற்படுத்துகின்றன.



தீவிரவாதி முத்திரை குத்தப்பட்டு, ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுவர்கள் பிரபாகரன் (இடது) மற்றும் பகத்சிங்.

ஜனநாயகப் புரட்சி நடைபெற்றுள்ள ஐரோப்பிய நாடுகளிலேயே இதுதான் உண்மை எனும்பொழுது, இந்தியாவைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்தியாவில் நடைபெறும் அரைக் காலனிய - அரை நிலபிரபுத்துவ ஆட்சி, தேர்தல், நாடாளுமன்றம், வாக்குரிமை, அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஆகியவற்றைக் கொண்டு ஜனநாயக முகமூடியை மாட்டிக் கொண்டுள்ளது. எனினும் இந்தப் போலி ஜனநாயகமும் போலி சுதந்திரமும் ஆளுங் கும்பலாலேயே தகர்க்கப்பட்டு வருகின்றன என்பதே உண்மை.

● வாக்காளர் பட்டியல் தயாரிப்பின் பொழுதே நடைபெறும் குளறுபடி, சட்டபூர்வமாகவே பல ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறித்து விடுகிறது. 2001-இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலின்பொழுது இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கையை விட, தற்பொழுது தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை ஆறு இலட்சம் குறைந்துவிட்டதாம். 18 வயது நிரம்பியவர்களுக்கே ஓட்டுரிமை இருக்கும் பொழுது, வாக்காளர்களின் எண்ணிக்கை எப்படி குறையும் என்ற எதிர்க் கட்சிகளின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் மாநிலத் தேர்தல் ஆணையம் முழித்துக் கொண்டுள்ளது.

● கள்ள ஓட்டுப் போடுவது, கட்சி குண்டர்கள் வாக்குச் சாவடிகளை கைப்பற்றுவது போன்ற தேர்தல் வன்முறைகள் ''அனைவருக்கும் வாக்குரிமை'' என்ற ஜனநாயகக் கோட்பாட்டைக் கேலிக் கூத்தாக்கி வருகின்றன.

● ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்நூல் மாவட்டத்தில் இருந்து மட்டும், இந்தக் கோடையின் பொழுது 3 இலட்சம் கிராமப்புற ஏழை விவசாயிகள் வேலை தேடி கிராமங்களில் இருந்து வெளியேறுவார்கள்; ஒரிசாவில் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் 20 இலட்சம் கிராமப்புற ஏழைகள் வேலை தேடி வெளிமாநிலங்களுக்குச் சென்று விடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு, ம.பி., கர்நாடகா, இராசஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களிலும் இந்த வெளியேற்றம் நடக்கும் எனக் குறிப்பிடும் சாய்நாத் என்ற பத்திரிகையாளர், ''இவர்களால் எப்படி வாக்களிக்க முடியும்?'' என்ற கேள்வியை எழுப்புகிறார்.

**அடிப்படை உரிமைகள் அனைத்தையும் குறுக்கு வழியில் பறித்துவிட்டு, தேர்தலை மட்டும் காட்டி, ''இதுதாண்டா ஜனநாயகம்'' என ஓட்டுக் கட்சிகள் நாடகமாடுகின்றன.**

1991 - ஆம் ஆண்டு மைய அரசு வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரம், கோடைகாலத்தின் பொழுது, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஒரு கோடி கிராமப்புற ஏழைகள், வேலை தேடி வெளிமாநிலங்களுக்குச் சென்று விடுவதாகக் குறிப்பிட்டுள்ளது. கடந்த பதிமூன்று ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மாறவில்லை என்று எடுத்துக் கொண்டால் கூட இந்தக் கோடையின் பொழுது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களின் பொழுது, ஏறத்தாழ 1 கோடி தகுதியான வாக்காளர்கள், ஓட்டுப் போட முடியாத சூழ்நிலை உருவாகிவிட்டது.

இந்திய அரசு தனது ஜனநாயகப் பற்றைக் காட்டுவதற்காக, ஜம்மு - காசுமீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்கள் பதிலி ஓட்டுக்களைப் போடலாம் என்ற உரிமையை வழங்கியிருக்கிறது. தீவிரவாதிகளைத் தேடி அலையும் இராணுவச் சிப்பாய்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உரிமை, வேலை தேடி பக்கத்து நகரத்துக்கோ, வெளிமாநிலங்களுக்கோ ஓடும் கிராமப்புற விவசாயிகளுக்கு ஒருக்காலும் கிடைக்கப் போவதில்லை. தனியார்மயம் - தாராளமயம் உருவாக்கும் இந்த நவீன நாடோடிகள் 'தேர்தலைப் புறக்கணிக்கிறார்களோ' இல்லையோ, ஜனநாயகம் இவர்களைப் புறக்கணித்து விட்டது.

•••

இந்திய அரசியல் சாசனத்தில் வாழ்வுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் சேரும் உரிமை எனப் பல உரிமைகள் கொட்டிக் கிடக்கின்றன ஆனால், காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்த ஜனநாயக உரிமைகளைப் பாமர மக்களால் தடையின்றி அனுபவிக்க முடிகிறதா?

அடிப்படை உரிமைகள் அனைத்தையும் குறுக்கு வழியில் பறித்துவிட்டு, தேர்தலை மட்டும் காட்டி, ''இது

www.padippakam.com

தாண்டா ஜனநாயகம்'' என ஓட்டுக் கட்சிகளும் ஆளும் கும்பலும் சேர்ந்து கொண்டு நாடகமாடுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ''பொடா'' போன்ற ஆள்தூக்கி கருப்புச் சட்டங்கள் நாடாளுமன்றத்தின் மூலமே இயற்றப்படுகின்றன. இந்து மதவெறி பயங்கரவாதக் கும்பலின் அட்டூழியங்களுக்கு நாடாளுமன்றம் கைப்பாவையாகப் பயன்படுகிறது.

''காட்'' ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டிருந்தாலும், அது இன்னும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை. நாடாளுமன்றத்திலோ, மக்கள் மத்தியிலோ எவ்வித விவாதங்களும் நடத்தாமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் பலவித அரசியல் - இராணுவ ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. நாடாளுமன்ற சட்ட விதிமுறைகளை மீறி, இலாபம் ஈட்டும் மிக முக்கியமான பொதுத்துறை நிறுவனங்கள் - எண்ணெய், வங்கி, காப்பீடு போன்றவை - பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. தனியார்மயம் - தாராளமயக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு, அரசியல் சாசன சட்டத்தைத் திருத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மறுகாலனி ஆதிக்கத்தையும், பாசிசத்தையும் திணிக்கும் சட்டபூர்வ கருவியாகவே நாடாளுமன்றம் இயங்கி வருகிறது என்பதே உண்மை.

இந்த நாடாளுமன்றத் தேர்தல்கள், ''எந்த ஓட்டுக்கட்சியின் தலைமையில் தனியார்மயம் - தாராளமயத்தை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்துவது? எந்த ஓட்டுக்கட்சியின் தலைமையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமாக நடந்து கொள்வது? எந்த ஓட்டுக்கட்சியின் தலைமையில் முன்னைவிடத் தீவிரமாக நாடாளுமன்றத்தின் மூலம் பாசிசத்தைத் திணிப்பது?'' என்பதைத் தீர்மானிப்பதற்காகத்தான் நடைபெறுகின்றன. வாக்குரிமை என்ற பெயரில் நமது விரலைக் கொண்டே நமது கண்ணைக் குத்தப் பார்க்கிறார்கள்.

எனவே, இந்தியாவெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் இந்த போலித்தனமான, மோசடித்தனமான தேர்தல்களைப் புறக்கணிக்க வேண்டும்; இதற்கு மாற்றாக, மறுகாலனி ஆதிக்கத்தையும், இந்து மதவெறி பாசிசத்தையும் எதிர்க்கும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளில் அணி திரண்டு, ஒவ்வொரு ஊரிலும் மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைக்கும் போராட்டத்தை நடத்த வேண்டும்!

● ரஹீம்

# “வறட்சியைக் கண்டு வாடாதே! வாழ்வுரிமைக்காகப் போராடு!”

## — *வி.வி.மு.வின் ஆர்ப்பாட்டங்கள்*

வறிய - பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டம், இதுவரை கண்டிராத கடும் வறட்சியால் இப்போது தத்தளித்துக் கொண்டிருக்கிறது. மழையில்லை; விவசாயமில்லை; வறண்டு கிடக்கும் ஏரி - குளங்கள்; காய்ந்து கிடக்கும் காவிரி; எங்கும் அனல் காற்று. நகர்ப்புறங்களில் தனியார் தண்ணீர் வியாபாரிகளின் பகற்கொள்ளை. கிராமப்புறங்களில் பிழைக்க வழியின்றி விவசாயிகள் ஊரைவிட்டு நகரங்களுக்கு ஓடி வேலை தேடும் கொடுமை. சிறு விவசாயிகள் டீசல் பம்பு செட்டுகளை காயலாங்கடையில் எடைக்குப் போடும் அவலம் - என்று தருமபுரி மாவட்ட உழைக்கும் மக்கள் தணலில் விழுந்த புழுவாகத் துடிக்கிறார்கள். இம்மாவட்டம் பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது.

தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது, இனி பாலாறும் தேனாறும் ஓடும் என்பது போல பத்திரிகைகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் பிரமையூட்டினர். தருமபுரி, கிருஷ்ணகிரி என இரு நிர்வாக அமைப்புகள் வந்தன. இரு மடங்கு அதிகாரிகள் - போலீசு கூட்டம் பெருத்துள்ளன. புதிதாக அலுவலகங்கள் கட்டப்படுகின்றன. ஆனால், மக்கள் வாழ்க்கை நிலையோ அதால பாதாளத்துக்குள் வீழ்ந்து கிடக்கிறது. அரசே அறிவித்த திட்டங்கள் கூட செயல்படுத்தப்படாமல் சுயவிளம்பரமாக முடங்கிக் கிடக்கின்றன. மறுபுறம் ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நாட்டுக்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தரப்போவதாகக் கூறிக் கொண்டு புதுப்பணக்கார கும்பல்களால் பூந்தோட்டங்கள், மூலிகைப் பண்ணைகள் நிறுவப்படுகின்றன. விவசாயிகளை விவசாயத்தை விட்டே விரட்டும் இப்பண்ணைகளுக்கு சலுகையும் மானியமும் கொடுத்து அரசு ஊக்குவித்து வருகிறது.

எனவேதான், ''தற்போதைய வறட்சியானது இயற்கையின் சீற்றமல்ல; ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகாரிகள் - தரகு முதலாளிகள் - பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் கூட்டுச்சதி; தாராளமயக் கொள்ளை!'' என்பதை விளக்கியும், உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அரசை நிர்ப்பந்தித்தும் விவசாயிகள் விடுதலை முன்னணி, தனது தோழமை அமைப்புகளான புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகியவற்றுடன் இணைந்து மாவட்டம் முழுவதும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, 8.3.04 அன்று பெண்ணாகரம், போச்சம்பள்ளி, திருப்பத்தூர், ஓசூர் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. 11.3.04 அன்று தேன்கனிக்கோட்டை வட்டம் அஞ்செட்டியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கடும் வறட்சியின் நடுவேயும் இப்பிரச்சாரம் - ஆர்ப்பாட்டத்துக்கு நிதியுதவி அளித்து விவசாயிகள் ஆதரவளித்தனர்.

''இது இயற்கையின் சீற்றமல்ல; ஆட்சியாளர்களின் கூட்டுச்சதி'' - ஒசூரில் நடந்த ஆர்ப்பாட்டம்.



*தகவல்: வி.வி.மு., தருமபுரி - கிருஷ்ணகிரி.*



படிப்பகம்

www.padippakam.com

# ஆளுவதோ அதிகார வர்க்கம் ஆடுவதோ தேர்தல் நாடகம்

"உங்கள் வாக்கு புனிதமானது; இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடியது. வாக்களிப்பது உங்கள் கடமை; உரிமை. எனவே தவறாது வாக்களியுங்கள்" என்று ஓட்டுக் கட்சிகள் வேண்டிக் கொள்கின்றன. அரசே செய்தி ஊடகங்களின் வழியாக இதைப் பிரச்சாரம் செய்து வருகிறது.

இதன்படி நீங்கள் வேட்பாளர்களை நன்கு பகுத்தாராய்ந்து, நேர்மையானவர்களுக்கு - யோக்கிய சிகாமணிகளுக்கு வாக்களிப்பதாக வைத்துக் கொள்வோம். ஒருவேளை அவர்கள் வெற்றி பெற்று விட்டால், அவர்களால் இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியுமா? இந்த நாட்டையும் மக்களையும் வளமானதொரு எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லத்தான் முடியுமா? தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்ன உரிமை, அதிகாரம் இருக்கிறது என்பது தான் அடிப்படையான கேள்வி.

பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து மாநிலத்திலும் மத்தியிலும் ஒரு அமைச்சரவையை நிறுவிக் கொள்ளலாம். அது கொண்டு வரும் சட்டதிட்டங்களுக்கு வாக்களித்து நிறைவேற்றலாம். எதிர்த்தரப்பினர் அதற்கெதிராக வாக்களிக்கலாம்; அல்லது அவையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்யலாம்; சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கமும் அதிகாரிகளும் அனுமதிக்கும் கேள்விகளை அவையில் எழுப்பலாம். அவர்கள் நியமிக்கும் கமிட்டிகளில் அங்கம் வகுத்து சிறப்பு சன்மானங்களுடன் 'ஆராய்ச்சி'களை நடத்தலாம்; அறிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் - இவைதான் நாம் தேர்ந்தெடுக்கும் மக்கள் பிரதிநிதிகளின் பணிகள், உரிமைகள்.

### இன்னும் என்ன சட்டம் பாக்கியிருக்கிறது?

இந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள், இனி நிறைவேற்றுவதற்கு இன்னும் என்ன சட்டம்தான் பாக்கியிருக்கிறது? தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், காப்பீடு, மருத்துவ வசதி முதலான சட்டங்கள் இல்லையா? கூலி - ஏழை விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி, வெள்ளம் - வறட்சி நிவாரணத் திட்டங்கள், ரேசன் - சத்துணவு போன்ற இலவசத் திட்டங்கள் இல்லையா? நிலப்பிரபுக்களுக்கு எதிரான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் இல்லையா? தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாக தீண்டாமை ஒழிப்பு, இட ஒதுக்கீடு சட்டங்கள்; பெண்களுக்கு ஆதரவாக சம வேலைக்கு சம ஊதியம், வரதட்சிணை ஒழிப்பு, விபச்சார ஒழிப்பு சட்டங்கள்; கள்ளச்சந்தை, கள்ள நோட்டு, கலப்படம், கள்ளச் சாராயம், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை முதலான கிரிமினல் குற்றங்களுக்கு எதிரான சட்டங்கள்; இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், ஆபாச தடுப்பு, அந்நிய ஊடுருவல், தீவிரவாத எதிர்ப்பு, தேசியப் பாதுகாப்பு, குண்டர்கள் தடுப்பு எனச் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கும் சட்டங்கள் - இப்படி கணக்கற்ற சட்டங்கள் இல்லையா?

இவை தவிர, ஏற்கெனவே ஐந்தாண்டுத் திட்டங்களும் ஆண்டுக்கு 10,15 சதவீதம் என்று வளர்ச்சித் திட்டங்களும் இல்லையா? பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, நீலப் புரட்சி என்று பல வண்ணங்களிலும் அதிவேக பொருளாதாரப் புரட்சித் திட்டங்கள் இல்லையா? இவையும் போதாதென்று ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தங்க நாற்கரண அதிவேக சாலை அமைக்கும் திட்டம், தகவல் தொடர்பு - கணினிமயமாக்கும் திட்டம், ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் - என அடுக்கடுக்கான திட்டங்கள்.

இந்தச் சட்டங்களையும் திட்டங்களையும் அமலாக்குவதற்கு பல லட்சம் கோடி ரூபாய்களுக்கு மேல் நிதி ஒதுக்கப்படுகிறது. இரண்டு கோடி பேருக்கும் மேலான அரசு அதிகாரிகளும் ஊழியர்களும் அவற்றை மேற்பார்வையிட்டு நிர்வகிக்கிறார்கள். இதற்கென துறைவாரியாக நிர்வாக அமைப்புகள் நிறுவப்படுகின்றன. அவர்கள் அடுக்குமாடி அலுவலகங்களிலிருந்து கணினிகள் - தொலைபேசி வசதிகளுடன் செயல்படுகிறார்கள். கார்களிலும் ஜீப்புகளிலும் பறக்கிறார்கள்.

### போடப்பட்ட சட்டங்களால் யாருக்குப் பலன்?

ஆனாலும் இந்த சட்டதிட்டங்களால் உழைக்கும் மக்களுக்கு ஒரு பலனும் இல்லை. வேலையிழந்து வாழ்விழந்து விவசாயிகளும் தொழிலாளர்களும் பட்டினிக்கும் தற்கொலைக்கும் தள்ளப்படுகிறார்கள். ஊதிய உயர்வுக்காகவும் உரிமைக்காகவும் போராடும் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களும் மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்டோர் மீதும், பெண்கள் - சிறுபான்மையினர் மீதும் வன்கொடுமைகள் தீவிரமாகி விட்டன. சமூக விரோத - கிரிமினல் குற்றங்கள் பெருகுகின்றன. ஏகாதிபத்திய நிறுவனங்களும் தரகு ஏகபோக முதலாளிகளும் கொழுக்கின்றனர். விவசாயிகள் விவசாயத்தை விட்டே விரட்டப்படுகின்றனர். புதிய பண்ணை நிலப்பிரபுக்களிடம் நிலங்கள் குவிகின்றன. நாடு பின்னோக்கி பெரும் பாய்ச்சலில் சென்று ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் அடிமையாகிக் கிடக்கிறது. பணவீக்கம், உள்நாட்டு - வெளிநாட்டு கடன் சுமை, விலைவாசி ஏற்றம், தொழில் தேக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை இதுவரை கண்டிராத வகையில் தீவிரமாகிறது.

இந்நிலையில், நீங்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்றம், நாடாளுமன்றத்துக்குப் போய் என்ன செய்யப் போகிறார்கள்? இன்னும் சில சட்டதிட்டங்களைப் போட்டு சட்டப் புத்தகத்தின் பக்கங்களைக் கூட்டுவார்கள். அரசு அலுவலகங்களையும் போலீசு நிலையங்களையும் அதிகரிப்பார்கள்; அதிகாரிகள் - ஊழியர்கள் - போலீசு கூட்டத்தைப் பெருக்குவார்கள். தேர்தலிலே செலவிட்ட பணத்தைப் போல பல மடங்கு சுருட்டிக் கொள்வார்கள். இலஞ்ச



படிப்பகம்

ஊழல் - அதிகார முறைகேடுகளில் மூழ்கித் திளைப்பார்கள். மக்கள் மீது மீண்டும் பொருளாதாரச் சுமைகளை ஏற்றுவார்கள்.

**'உத்தமர்' ஆட்சிக்கு வந்தால் ஊழலை ஒழிக்க முடியுமா?**

''இப்போதைய அரசியல்வாதிகள் தான் இப்படி இருக்கிறார்கள். காமராசர் போன்ற ஒழுக்க சீலர்களும் உத்தமர்களும் எளிமையானவர்களும் கூட முன்பு இருந்திருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நல்லவர்கள், கறைபடியாத கரங்களைக் கொண்டவர்களுக்கு நாம் ஓட்டுப் போடலாம்'' என்று நீங்கள் கருதலாம். ஆனால் அப்படிப்பட்ட யோக்கிய சிகாமணிகளை ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுத்தாலும் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள், சாதி-மத வெறியாட்டங்கள், அடக்குமுறைகளை ஒழித்து விட முடியாது.

ஏனென்றால், பிச்சைகாரனிடமும் விபச்சாரியிடமும் கைநீட்டி மாமூல் வாங்கிப் பழக்கப்பட்ட போலீசுக்காரன்; வேர்கடலை, பழம், முறுக்கு - சுண்டல் விற்கும் நடைபாதை வியாபாரிகளிடம் லஞ்சமாக அவற்றை அள்ளித் தின்று பழக்கப்பட்ட போலீசுக்காரன்; ஆட்டோ சங்கர், தாதா வீரமணி போன்ற சமூக விரோதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கிரிமினல் குற்றங்கள் செய்யும் போலீசுக்காரன்; பெருமுதலாளிகள், பெருநிலப்பிரபுக்களின் அடியாட்களாக இருந்து தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒடுக்கும் போலீசுக்காரன், இப்போது ஒரு யோக்கியர் ஆட்சிக்கு வந்துவிட்டார் என்பதற்காக மாறிவிட மாட்டான்.

ஏழைக் குழந்தைகளுக்குப் போடும் மதிய உணவில் ஊழல் செய்யும் அதிகாரிகள். ஏழைகளுக்கான ரேஷன் பொருட்களில் ஊழல் செய்யும் அதிகாரிகள், அந்நிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்கும்போது நாட்டுப் பற்று கொஞ்சமும் இல்லாமல் ஊழல் செய்யும் அதிகாரிகள், கார்கில் போரில் கொல்லப்பட்ட சிப்பாய்களுக்கான சவப்பெட்டி வாங்கியதில் கூட ஊழல் செய்த அதிகாரிகள், சீமைச்சாராயத்துக்கும் விபச்சாரத்துக்கும் மயங்கி நாட்டின் இராணுவ இரகசியங்களை விற்கும் அதிகாரிகள் - இவர்களில் எவரும் ஒரு 'உத்தமர்' ஆட்சிக்கு வந்துவிட்டார் என்பதற்காக மாறிவிட மாட்டார்கள்.

ஆனால், ''ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள்தான் அயோக்கியர்கள் - மோசமானவர்கள்; படித்த அறிவாளிகளான அதிகாரிகள் திறமையானவர்கள்; அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளும் நிர்பந்தங்களும் இல்லாவிட்டால் சட்டப்படி அவர்கள் நேர்மையாகச் செயல்படுவார்கள்'' என்று பல பத்திரிகைகளும் அறிவாளிகளும் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றன. சில படித்த முட்டாள்களும் அதை நம்புகின்றனர்.

**ஊழலின் பிறப்பிடம் - பிதாமகன் யார்?**

உண்மையில் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளைச் செய்வதற்கும் மோசடி அம்பலமானால் மூடி மறைக்கவும், தப்பித்துக் கொள்வதற்கும் தேவையான தொழில் ரகசியங்களை ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளுக்கு கற்றுக் கொடுத்துப் பயிற்றுவிப்பவர்களே அதிகாரிகள் கூட்டம்தான். எனவேதான் எல்லா இலஞ்ச ஊழல் அரசியல்வாதிகளோடும் நெருங்கிய கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ள அரசுயர் அதிகாரிகளும் போலீசு அதிகாரிகளும் இருப்பதைக் காண்கிறோம்.

அரசின் அன்றாட நிர்வாகத்தைக் கவனிப்பதும் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் இந்த அதிகாரிகள் கூட்டம்தான். இவர்கள் வாங்கும் லஞ்சத்திற்கு எல்லையே இல்லை; அதைக் கணக்கிடவும் முடியாது. போலீசு, வரு



www.padippakam.com

வாய்த் துறை, போக்குவரத்துத் துறை, நீதிமன்றங்கள், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முதல் தலைமைச் செயலகம் வரை, ஏன் அதற்கும் மேலும் கூட இலஞ்சமும் ஊழலும் புழுத்து நாறுகிறது. நாட்டைக் காப்பதாகக் கூறப்படும் இராணுவத்திலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இப்படி எங்கெல்லாம் அதிகாரிகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இலஞ்சமும் ஊழலும் இருக்கிறது. அரசு அலுவலக மேசை, நாற்காலிகள், தூண்கள், படிக்கட்டுகள் கூட இலஞ்சம் கேட்குமளவுக்கு எங்கெங்கும் இலஞ்சம் வியாபித்திருக்கிறது. இலஞ்சம் என்பது அதிகார வர்க்கத்தின் இரத்தத்தின் இரத்தம்; உடன் பிறப்பு.

சாதிச் சான்றிதழ், பிறப்பு - இறப்பு சான்றிதழ், வாரிசுரிமை சான்றிதழ், போக்குவரத்து வாகன லைசென்சு - இப்படி ஏதோவொரு சான்றிதழ் பெறுவதற்கு அதிகாரிகளிடம் கையெழுத்து வாங்கச் சென்றவர்களுக்கு இந்த உண்மை தெளிவாகத் தெரியும். இப்படி எந்தச் சான்றிதழுக்காகவும் அலையாமல், தானுண்டு, தன் வேலையுண்டு என்று ஒதுங்கியிருக்கும் சாமானிய மக்களிடம் கூட அரசின் சட்டதிட்டங்களைச் செயல்படுத்துகிறோம் என்று அதிகார வர்க்கம் வழிப்பறி செய்கிறது. ஒருவழிப் பாதையிலே போனாய்; தண்டவாளத்தைக் கடந்தாய்; வாகனத்தை அதிவேகமாக ஓட்டினாய்; பொது இடத்தில் புகை பிடித்தாய்; சந்தேகப்படும்படி திரிந்தாய் என்று சாதாரண தவறுகளுக்குக் கூட இலஞ்சத்தைக் கறந்துவிடுகிறது.

''உங்க பேப்பர் அடுத்த செக்ஷனுக்குப் போகணும் சார்; ஆகவேண்டியதக் கவனிச்சாத்தான் சார் காரியம் நடக்கும்; படிச்ச - விபரமான நீங்களே இப்படி புரியாம இருக்கிறீங்களே!'' என்று ஒரு சான்றிதழுக்கு நீங்கள் அரசு அலுவலகத்துக்குப் போனால், அதிகாரிகள் இப்படி நாசூக்காக உபதேசம் செய்வதைக் கேட்கலாம். ''அதெல்லாம் தரமுடியாது. உன் கடமையை ஒழுங்காகச் செய்!'' என்று நீங்கள் இலஞ்சம் தர மறுத்தால், உங்களை அலைய வைத்து இழுத்தடிப்பார்கள். அதன்பிறகும் நீங்கள் அசைந்து கொடுக்காவிட்டால், ''இப்படித்தான் செய்வோம்; உன்னால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று ஆணவத்தோடு பேசி, உங்கள் மனுவைக் குப்பைக் கூடைக்கு அனுப்புவார்கள்.

பல தமிழ் சினிமாக்களில் ஊழல் - அராஜக அரசியல்வாதி ஒருவனைப் பார்த்து, 'நேர்மையான' போலீசு அதிகாரியாக வரும் கதாநாயகன், ''டேய்! உன்னால ஆனதைப் பார்! நீ என்னுடைய ஒரு மயிரையும் புடுங்க முடியாது. உன்னோட ஆட்டமெல்லாம் அஞ்சு வருசத்துக்குத்தான். ஆனால் நான் நிரந்தரமானவன். நீ ஒன்னும் என்னை வேலைக்கு வைக்கல. நீ ஒன்னும் எனக்கு சம்பளம் போடலை!'' என்று வீரவசனம் பேசும் காட்சிகள் வரும். இப்படித்தான் மக்களைப் பார்த்தும் அதிகாரிகள் திமிராகப் பேசுகிறார்கள். இதிலே அதிகார வர்க்கத்துக்கே உரித்தான ஆணவமும், அகங்காரமும் அலட்சியமும் மட்டுமில்லை; உண்மையும் இருக்கிறது.

## ஆள்வது அதிகாரிகள்தான்!

அரசு எனும் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள் இந்த அதிகாரிகள்தான். அரசு எனும் ஆயிரங்கால் பூதத்தின் கண்ணும் காதும் மூளையும் மூக்குமாக இருப்பது அதிகார வர்க்கம்தான். போடப்படும் சட்ட திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம் அதிகாரிகளிடம் தான் இருக்கிறது. அதனால்தான் அவர்களுக்கு அதிகாரிகள் என்று பெயர். ஆட்சி நடத்துவதே அவர்கள் தான். அதனால்தான் வட்ட ஆட்சியர், கோட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் என்றெல்லாம் பெயர் வந்தது.

மக்கள் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்ததெல்லாம் சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளூராட்சி உறுப்பினர்களைத்தான்; அதிகாரிகளை அல்ல. எத்தகையதொரு நேர்மையான மக்கள் பிரதிநிதியாக இருந்தாலும், அதிகாரிகளின் லஞ்ச ஊழல் அடாவடித்தனங்களுக்கு எதிராக ஒன்றும் செய்துவிட முடியாது. அதிகாரிகளைத் தட்டிக் கேட்கவோ நடவடிக்கை எடுக்கவோ எந்தவொரு மக்கள் பிரதிநிதிக்கும் உரிமையோ, அதிகாரமோ கிடையாது. அமைச்சரேயானாலும் அரசு நிர்வாகத்தைக் கையிலெடுத்துக் கொள்ள முடியாது. அதிகாரிகளின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் அம்பலப்பட்டால் கூட, மற்ற மேலதிகாரிகளிடம் முறையிடத்தான் முடியும்.

நாடு முழுவதுமுள்ள சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய - மாநில அமைச்சர்களின் எண்ணிக்கை சில ஆயிரம் பேர்கள்தான். ஆனால், நாடு முழுவதுமுள்ள அரசு நிர்வாகம், அரசுத்துறை தொழில்கள், போலீசு, இராணுவம், நீதிமன்றம் ஆகியவற்றில் 'பணியாற்றும்' அதிகாரிகளைக் கணக்கிட்டால் பல பத்து லட்சம் பேர்கள் இருப்பார்கள். ஒரு சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர் ஊழல் செய்தால், போட்டி காரணமாக ஒருவருக்கொருவர் காட்டிக் கொடுத்து அம்பலமாகி விடுகிறது. ஆனால், பெருங்கூட்டமாக உள்ள அதிகார வர்க்கத்தின் ஊழல், மோசடி, அடக்குமுறைகள் வெளியே அதிகமாகத் தெரிவதில்லை. உண்மையில், மக்கள் பிரதிநிதிகளின் ஊழல் மோசடிகளைவிட பல மடங்கு அதிகமாக ஊழல் மோசடிகளைச் செய்யும் மிகப் பெரிய, ரத்தம் குடிக்கும் ஒட்டுண்ணிக் கூட்டம்தான் அதிகார வர்க்கம்.

ஒவ்வொரு அதிகாரியும் அவருக்கு மேலே உள்ள அதிகாரியின் கண்காணிப்புக்கும் உத்தரவுக்கும் தான் கட்டுப்பட்டவர்கள். மக்கள் பிரதிநிதிகளுக்கோ, அமைச்சர்களுக்கோ அவர்கள் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் கிடையாது. இதுதான் சட்டபூர்வ ஆட்சியதிகார நிர்வாக அமைப்புமுறை. எனவேதான், அரசு அதிகாரிகளின் நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளோ, மந்திரிகளோ தலையிடும்போது, அதை ''அரசியல் குறுக்கீடு'' ''அரசியல் தலையீடு'' என்று பத்திரிகைகளும் எதிர்கட்சியினரும் சட்டதிட்ட வல்லுனர்களும் கண்டிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகளோ, அவ்வாறு தலையிடுவது தமது உரிமை என்று வாதிடுவது கூட இல்லை. ''அரசின் நிர்வாகத்தில் குறுக்கிடவில்லை; அரசு அதி






படிப்பகம்

www.padippakam.com

காரிகளின் பணிகளுக்கு இடையூறு செய்யவுமில்லை'' என்று புளுகி மழுப்பி விடுகின்றனர்.

ஒரு அதிகாரி, தனது மேலதிகாரியிடம் காரியத்தை சாதித்துக் கொள்ள மக்கள் பிரதிநிதிகளையோ அமைச்சர்களையோ பிடித்து சிபாரிசு செய்யச் சொல்கிறான். அதேபோல, மக்கள் பிரதிநிதிகளும் மந்திரிகளும் ஒரு உயர் அதிகாரியைப் பிடித்து தனக்கு வேண்டப்பட்டவனுக்கு சிபாரிசு செய்யச் சொல்லி காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள். இதைப் பார்த்து, மக்கள் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர்களுக்கும்தான் அனைத்து அதிகாரமும் இருப்பதாக நம்பச் சொல்லி மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள். அமைச்சர்கள், முதல்வர் ஆகியோருக்கு போலீசு அதிகாரி சல்யூட் அடிப்பதையும், அரசு அதிகாரி கார் கதவைத் திறந்து விடுவதையும் பார்த்து, உண்மையிலேயே மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் எல்லா அதிகாரமும் இருப்பதாக பாமரத்தனமாக மக்கள் ஏமாறுகிறார்கள். ஆனால், பாசிச ஜெயலலிதாவுக்கு ஒரு குழந்தை இருந்தால், இது அவரது குழந்தைதான் என்று பிறப்புச் சான்றிதழைக் கொடுப்பதே அதிகாரிகள்தான். இது என் குழந்தைதான் என்று ஜெயலலிதா ஒரு சான்றிதழில் கையெழுத்திட்டுக் கொடுத்தால் அது செல்லுபடியாகாது. இந்தச் சாதாரண உதாரணமே, யாருக்கு உண்மையில் அதிகாரம் இருக்கிறது என்பதைக் காட்டிவிடும்.

### அரசு: மிகப்பெரிய சுரண்டல் - ஒடுக்குமுறை நிறுவனம்

அரசு அதிகாரம் பற்றிய விவகாரம்தான் அரசியல். அரசு நிர்வாக எந்திரமாகிய அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், நீதிமன்றம் முதலான அமைப்புகளைப் பற்றியதுதான் அரசியல். முதன்மையாக அதிகாரிகள்தான் இந்த அரசு நிர்வாக எந்திரத்தைப் பொறுப்பேற்று இயக்குகிறார்கள்.

ஆனால், அரசியல் கட்சிகள், கூட்டணிக் கட்சிகள், எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளைப் பரிசீலிப்பதும் விவாதிப்பதும் விமர்சிப்பதும் தான் அரசியல் என்பதாக இங்கே பத்திரிகைகளும் அறிஞர் பெருமக்களும் மாய்மாலம் செய்கிறார்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற கூத்துக்களும், உறுப்பினர்களின் ஆட்டம் - பாட்டம் - ஆர்ப்பாட்டங்களும், போடும் வேஷம் - கோஷங்களும்தான் அரசியல் என்பதாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்த ஆரவாரத்தில் மக்களின் கவனத்தை மூழ்கடித்துவிட்டு அதிகார வர்க்கம் தனது அரசு நிர்வாகத்தை எதிர்ப்பேயில்லாமல் எதேச்சதிகாரமாக நடத்திக் கொண்டு போகிறது. மிகப் பெரிய சுரண்டல் - அடக்குமுறை நிறுவனமான அரசு எந்திரம் தனது கோர உருவத்தை மூடி மறைக்க, மாட்டிக் கொண்டு கழற்றி எறியும் உடுப்புதான் சட்டமன்றங்களும் நாடாளுமன்றமும். தேவைப்படும் போது இந்த ஆடையைப் போட்டுக் கொண்டு ஜனநாயக ஆட்சி நடப்பதாக மாய்மாலம் செய்யும். அவசியமில்லாவிட்டால் அந்த ஆடையையும் கழற்றி எறிந்துவிட்டு அம்மணமான பாசிச ஆட்சியையும் இராணுவ சர்வாதிகார ஆட்சியையும் நடத்தும்.

சட்டமன்றமும் நாடாளுமன்றமும் தேர்தல்களும் இல்லாவிட்டாலும் அதிகாரிகளின் ஆட்சி நடக்கும். ஆனால், அதிகாரிகள் கூட்டமும் அரசு எந்திரமும் இல்லாமல் எந்தவொரு முதலாளித்துவ ஆட்சியும் நிர்வாகமும் இயங்கவே முடியாது. நமது நாட்டில் பலமுறை சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சியும், அரசுத் தலைவர் ஆட்சியும் பிரகடனப்படுத்தப்பட்டதற்கும், மாவட்ட ஆட்சியர் தனது அதிகாரத்தை ஏவி தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளைக் கலைத்ததற்கும் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. உலகின் - சில நாடுகளில் ஜனநாயக ரீதியிலான தேர்தல்கள் நடப்பதில்லை. ஆனாலும் அங்கேயொரு ஆட்சி நடக்கிறது.

ஆகவே, தேர்தல் நடந்தாலும் நடக்காவிட்டாலும் எவனும் வெற்றி பெறாவிட்டாலும், நீங்கள் ஓட்டுப் போட்டாலும் போடாவிட்டாலும் ஆளுவது அதிகாரிகள்தான். இன்னும் சொல்லப் போனால் தேர்தல்களையே அதிகாரிகள்தான் நடத்துகிறார்கள். இத்தனை முறை தேர்தல் நடந்தும்கூட அதிகாரிகளின் ஆணவமிக்க ஆட்சி மாறவில்லை. ஆளுவதாகக் கூறிக் கொள்ளும் வெவ்வேறு நிறத்தில் கொடிபிடிக்கும் ஓட்டுக் கட்சிக்காரர்கள்தான் மாறியிருக்கிறார்கள்.

### ஆடுவதோ தேர்தல் நாடகம் ஆளுவதோ அதிகார வர்க்கம்

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் சட்டதிட்டங்கள் போடுவதும் அதிகார வர்க்கம் அதை நடைமுறைப்படுத்தி நிர்வகிப்பதுமான இரட்டை ஆட்சிமுறைதான் நமது நாட்டில் ஜனநாயகம் என்ற பெயரில் நீடிக்கிறது. அதாவது, ஆடுவதோ தேர்தல் நாடகம்; ஆளுவதோ அதிகாரிகள் கூட்டம். இப்போலியான, பொய்யான ஜனநாயக ஆட்சி முறையில் ஓட்டுப் பொறுக்கிகளும் அதிகாரிகளும் செய்யும் லஞ்ச ஊழல், மோசடிகள், முறைகேடுகள், அக்கிரமங்கள், அடக்குமுறைக்குப் பின்னே - அவற்றால் ஆதாயமடையும் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டம் இருக்கிறது.

அந்நிய ஏகாதிபத்தியங்கள் - பன்னாட்டு ஏகபோகத் தொழில் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு இந்த நாட்டைச் சுரண்டிக் கொழுக்கும் தரகு அதிகார முதலாளிகள்; ஏராளமான, வளமான நிலங்களைக் குவித்துக் கொண்டு இந்நாட்டின் கூலி, ஏழை, குத்தகை விவசாயிகளை ஒட்டச் சுரண்டும் நிலப்பிரபுக்கள்; - இவர்களின் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பாதுகாப்பதற்குத்தான், இவர்களின் நலன்களுக்குச் சேவை செய்வதற்குத்தான் ஓட்டுப் பொறுக்கிகள் இப்படியொரு போலி ஜனநாயகத் தேர்தல் நாடகமாடுகிறார்கள். அதிகாரிகள் இவ்வளவு அக்கிரமங்களையும் செய்கிறார்கள்.

நியாயமான, முறையான, சட்டபூர்வமான அரசு காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக ஏழை, எளிய, நடுத்தர மக்களிடம் நிர்பந்தமாக லஞ்சம் வாங்குவதை ஓட்டுப் பொறுக்கிகளும் அதிகாரிகளும் வழமையாக்கிக் கொண்டுள்ளனர். இவையெல்லாம் ஓட்டுக் கட்சிகளின் குட்டித் தலைவர்களும் தரகர்களும் கீழ்மட்ட அரசு ஊழியர்களும் அதிகாரிகளும் செய்பவை.

ஆனால், இதைவிடப் பலமடங்கு பெரிய அளவில் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மேலே நடக்கின்றன. நூறுகோடி ரூபாய் மூலதனமுள்ள ஒரு ஆலைக்கு உரிமம் கொடுத்தால், அதிலே பத்து கோடி கமிஷனாகக் கிடைக்கும் என்று கணக்குபோட்டு காரியமாற்றுகிறார்கள் ஓட்டுக் கட்சித் தலைவர்களும், அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும். அந்த ஆலை சட்டப்படி முறையாக நிறுவப்படுகிறதா, இதனால் சுற்றுச்சூழலோ, மக்களின் வாழ்வுரிமையோ பாதிப்படையாமல் உள்ளதா, எதிர்காலத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் பலனளிக்கக் கூடியதா என்றெல்லாம் பார்ப்பதில்லை. நாடு சுடுகாடானாலும் பரவாயில்லை; எனக்கு எத்தனைகோடி கிடைக்கும் என்று கணக்கு போட்டு நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சு கோகோ கோலா ஆலைக்கு அனுமதி தருவது, தோல் கம்பெனி - சாயப்பட்டறை கழிவுகளை ஆற்று நீரிலே கலக்க விடுவது, மோசடி நிறுவனம் என்று தெரிந்தும் கோடிகோடியாய்க் கொட்டி என்ரான் நிறுவனத்துக்கு அனுமதியளித்து நட்டத்தை மக்கள் தலையில் ஏற்றுவது, நகரை அழகுபடுத்


படிப்பகம்

துவது என்ற பெயரில் குடிசைப் பகுதிகள் - பிளாட்பாரக் கடைகளை இடிப்பது, விவசாயத்தையும், விவசாயிகளையும் நாசமாக்கிவிட்டு இறால் பண்ணைகள், தேக்குப் பண்ணை, மலர் பண்ணைகளைத் தொடங்க உதவி செய்வது, உள்நாட்டு சிறுதொழில்களை ஒழித்துக் கட்டிவிட்டு, அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களுக்குத் தாராள அனுமதி தருவது, அரசுத்துறை நிறுவனங்களை நட்டக் கணக்கு காட்டி மூடி, தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்துவிட்டு, அந்த ஆலைகளை அடிமாட்டு விலைக்குத் தனியார் முதலாளிகளுக்கு விற்று ஆதாயமடைவது என்பதாக முதலாளிகள் - நிலப்பிரபுக்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆதாயமடைவதோடு, அவர்களுக்கு விசுவாசமாக அதிகாரிகள் சேவை செய்கிறார்கள்.

இத்தகைய லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மட்டுமல்ல; நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரம், அரசின் வரவு-செலவுகள், ஐந்தாண்டுத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து கொள்கைகளை ஏகாதிபத்தியங்கள், தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் ஏற்ற வகையில் வகுப்பவர்களும் அவற்றைச் செயல்படுத்துபவர்களும் இந்த அதிகாரவர்க்க ஒட்டுண்ணி கூட்டம்தான். மறுபுறம், ஒரு முதலாளிக்கு எதிராக தொழிலாளர்கள் சங்கமாகத் திரண்டு போராடினாலோ, அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராடினாலோ கருப்புச் சட்டங்களை ஏவி ஒடுக்குவதும், தடியடி - துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்குவதும் இந்த அதிகார வர்க்க - போலீசு கூட்டம்தான்.

### கொள்ளையர்களும் வெள்ளையானையும்

நாட்டின் அரசியல் நிர்ணய சட்டமே இந்த அடிப்படையில்தான் உள்ளது. மக்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பு, குடியிருப்பு, கல்வி, மருத்துவம் முதலான அடிப்படை உரிமைகளை அது உத்திரவாதம் செய்யவில்லை. ஆனால், சொத்துரிமை, அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்நிய ஏகாதிபத்தியங்கள், தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் கொள்ளையும் சுரண்டலும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. அதிகார இந்த ஆளும் வர்க்கங்களின் சொத்துரிமையைப் பாதுகாப்பதற்காகவே அதிகார வர்க்கம் பாடுபட்டுச் சேவை செய்து வருகிறது. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிலர் அதிகாரிகளாக பதவிக்கு வந்தாலும், ஆளும் வர்க்கச் சிந்தனையிலும் ஆளும் வர்க்கத்துக்குச் சேவை செய்யும் வகையிலும்தான் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள். தமது வர்க்கத்தன்மையின் காரணமாக இயல்பாக லஞ்ச ஊழல், மோசடி, அதிகாரமுறைகேடுகள், அடக்குமுறை அட்டூழியங்களைச் செய்வதோடு, சம்பளம், சலுகை, கார், பங்களா, பணியாட்கள் என்று நமது வரிப்பணத்தையும் மலையளவு விழுங்கி ஏப்பம் விடுகிறது இந்த ஒட்டுண்ணிக் கூட்டம். நாளும் ஊதிப் பெருத்துவரும் கோட்டு சூட்டு போட்ட



இந்த அதிகார வர்க்கக் கூட்டம் நாட்டின் வருவாயில் பெருமளவு விழுங்கும் வெள்ளை யானை என்றழைக்கப்படுகிறது.

தற்போது தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாட்டை மீண்டும் காலனியாக்கும் கொள்கைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, அதிகாரிகளின் ஆட்சி நேரடியாகவும் வெளிப்படையாகவும் நடக்கத் தொடங்கி விட்டது. மக்கள் பிரதிநிதி சட்டங்கள் போட்டு திட்டங்கள் தீட்டுவதும், அதிகார வர்க்கம் அதைச் செயல்படுத்துவதுமான நிலைமை மாறி, இப்போது உலக வங்கி உத்தரவுப்படி அதன் திட்டங்களுக்கேற்ப அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.

உதாரணமாக, ஒரு நகராட்சி கமிஷனரை எடுத்துக் கொள்ளுங்கள். நகரை அழகுபடுத்துவது, சாலைகளை அகலப்படுத்துவது என்ற பெயரில் அவர் குடிசைகளையும் பிளாட்பாரக் கடைகளையும் இடித்துத் தள்ளுகிறார். கேட்டால், இது உலக வங்கியின் திட்டம் என்கிறார். இதை எதிர்த்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. நம்மை ஆளுவதாகக் கூறப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் உரிமையும் அதிகாரமும் இவ்வளவுதான்! அவ்வளவு ஏன், நாட்டை ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு அடிமையாக்கும் உலக வர்த்தக அமைப்புக்கு முன்னோடியான ''காட்'' ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டதே நாடாளுமன்றத்துக்குத் தெரியாது. அணுகுண்டு வெடிப்பு, கார்கில் போர் முதலான எதுவும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அல்ல. இவையெல்லாம் அமைச்சர்களும் அதிகாரவர்க்கமும் தன்னிச்சையாகத் திணித்த கொள்கைகள். நம்மை ஆளுவதாக கூறிக் கொள்ளும் மக்கள் பிரதிநிதிகளுக்குள்ள உரிமை - அதிகாரத்தின் யோக்கியதை இவ்வளவுதான்.

இத்தகைய மக்கள் விரோத - நாட்டுவிரோத அதிகாரிகளே கூடாது என்று இந்த நிர்வாக முறையை மாற்றியமைக்கவோ, கண்டிக்கவோ மக்கள் பிரதிநிதிகளுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அப்படி முயற்சி எதுவும் செய்தால் இராணுவமும் அதிகார வர்க்கமும் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆட்சியைக் கவிழ்த்துவிடும். சட்டமன்றங்களையும், நாடாளுமன்றத்தையும் கலைத்து விட்டு இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிறுவிவிடும். அதிகார வர்க்கத்துக்கு எதிராக இருப்பது ஒருபுறமிருக்கட்டும். நாட்டின் ஆளும் வர்க்கங்களான தரகு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் நலன்களுக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகள் சட்டம் இயற்றினால்கூட, அதிகார வர்க்கமும் இராணுவமும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மக்கள் பிரதிநிதிகளைச் சிறையிலடைத்து இராணுவ சர்வாதிகார ஆட்சியைப் பிரகடனம் செய்துவிடும். நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவற்றிலும் இதர பல முதலாளித்துவ நாடுகளிலும் அதிகாரவர்க்கமும் இராணுவமும் பல ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

www.padippakam.com

**ஓட்டுப் போடாதே!**
**புரட்சி செய்!**

எனவேதான், இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தை போலி ஜனநாயகம், பெயரளவிலான ஜனநாயகம் என்கிறோம். இது மக்களை ஏய்க்கும் ஜனநாயகம், தரகுப் பெருமுதலாளிகள் - நிலப்பிரபுக்கள் - அதிகாரவர்க்கத்தின் நாயகம் என்று அறுதியிடுகிறோம். இது ஜனநாயகம் என்ற பெயரிலான சர்வாதிகாரம்; இந்தச் சர்வாதிகாரத்தை அங்கீகரித்து ஓட்டுப் போடுவதென்பது, நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் கால் விலங்காகும். எனவேதான் இந்தப் போலி ஜனநாயகத்தைப் பாதுகாத்து நியாயப்படுத்துவதற்காக நடக்கும் தேர்தலைப் புறக்கணியுங்கள் என்று கோருகிறோம்.

தேர்தலைப் புறக்கணியுங்கள் என்று அறைகூவல் விடுக்கும்போது, நாட்டில் நடக்கும் அட்டூழியங்களை கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கச் சொல்லவில்லை. "நமக்கு எதற்கு அரசியல்? பேசாம பிழைப்பைப் பார்ப்போம்" என்று ஒதுங்கிக் கொள்ளவும் சொல்லவில்லை. ஏனெனில் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அரசியல் தலையிடாத விவகாரமே இல்லை. அரிசி - பருப்பு, காய்கறி விலையேற்றம், குடிநீர் - குடியிருப்பு வசதியிலிருந்து நாம் எவ்வளவு குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும், எந்த மதத்தில் இருக்க வேண்டும், நம்முடைய தொழில் - வருமானம் வரை அனைத்திலும் அரசியல் தலையிடும்போது நாம் அரசியலற்றவர்களாக - அக்கறையற்றவர்களாக இருக்க முடியாது. மாறாக, நமக்குச் சாதகமான, ஆகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்குப் பயன்படக் கூடிய, உழைக்கும் மக்கள் அதிகாரம் செலுத்தக்கூடிய புரட்சிகர அரசியலுக்காகப் பாடுபட வேண்டும் என்கிறோம். எனவேதான், "தேர்தலைப் புறக்கணியுங்கள்! யாருக்கும் ஓட்டுப் போடாதீர்கள்! புரட்சி செய்யுங்கள்!" என்று அறைகூவுகிறோம்.

**மக்களுக்கே அதிகாரம்!**
**அதுவே மக்கள் ஜனநாயகம்!**

இந்தப் புரட்சியானது, இன்றைய போலி ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிரான உழைக்கும் மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சி. இந்தப் புரட்சியானது, அரட்டை மடங்களான சட்டமன்ற - நாடாளுமன்றங்களுக்குச் சமாதி கட்டுவது மட்டுமின்றி, வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு நாட்டையும் மக்களையும் ஆட்டிப் படைக்கும் அதிகார வர்க்க - போலீசு - இராணுவ அமைப்பை அடியோடு வெட்டிச் சாய்த்திடும் புரட்சி. தற்போதைய நாடாளுமன்ற ஆட்சிமுறை - அதிகார வர்க்க நிர்வாக அமைப்பு முறை எனும் இரட்டையாட்சி முறையைத் தகர்த்தெறியும் புரட்சி.

இப்புரட்சியில் பங்கேற்கும் உழைக்கும் மக்களும் போராளிகளும் கட்டியமைக்கும் மக்கள் சர்வாதிகார மன்றங்கள், ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் முழு அதிகாரம் செலுத்தும். ஏகாதிபத்தியவாதிகள், தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்கள், வட்டி - லேவாதேவிக்காரர்கள், சமூக விரோதிகளை மக்கள் மன்றத்தில் வைத்து விசாரித்துத் தண்டித்து, அவர்களது சொத்துக்களை நட்டஈடின்றிப் பறிமுதல் செய்து உழைக்கும் மக்களுக்குப் பங்கீடு செய்யும். உழைக்கும் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்ட திட்டங்களை இயற்றவும் அதைச் செயல்படுத்தவும் முழு அதிகாரமளிக்கும்.

தற்போதுள்ள இரட்டை ஆட்சிமுறைக்கு மாறாக - மக்கள் பிரதிநிதிகளுக்கு சட்டதிட்டங்களை நிறைவேற்ற மட்டும் உரிமை; அவற்றைச் செயல்படுத்துவதும் கிடப்பில் போடுவதும் அரசு நிர்வாக அமைப்புக்கு உள்ள அதிகாரம் என்கிற ஆட்சிமுறைக்கு மாறாக - தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே சட்டமியற்றவும் அதைச் செயல்படுத்தவும் முழு அதிகாரமளிக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எந்த மட்டத்தினராக இருந்தாலும், அவர்கள் குற்றமிழைத்தால் அவர்களது பதவி - பொறுப்புகளை ரத்து செய்துவிட மக்களுக்கு முழு அதிகாரமளிக்கும். இத்தகைய புரட்சிகரமான மக்கள் ஜனநாயக ஆட்சியில் மட்டுமே, மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குப் பொறுப்பானவர்களாக, மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்க முடியும். ஒட்டு மொத்த சமுதாயத்தையே மலைப்பாம்பு போலச் சுற்றி வளைத்து நசுக்கி வரும் அதிகார வர்க்க ஒட்டுண்ணி ஆட்சிமுறைக்கு மாறாக, உழைக்கும் மக்களே முழு அதிகாரத்தையும் ஏந்தி நிர்வாக பொறுப்புகளைச் செயல்படுத்தும் இத்தகைய ஆட்சிமுறையே உண்மையான ஜனநாயகமாகும். உழைக்கும் மக்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள ஆயுதம் ஏந்தவும் குடிபடைகள் அமைத்துக் கொள்ளவும் உரிமையுள்ள இத்தகைய ஆட்சிமுறை மட்டுமே, உண்மையான மக்கள் ஜனநாயகமாகும்.

● மனோகரன்



**"கொலைகார அத்வானியே, கோவைக்குள் நுழையாதே!"**

***- புரட்சிகர அமைப்புகளின் சுவரொட்டி பிரச்சாரம்***

**துணைப் பிரதமரும் இந்துவெறி பாசிச பயங்கரவாதியுமான அத்வானி, காசுமீர் முதல் கன்னியாகுமரி வரை மேற்கொண்டுள்ள இரத யாத்திரையின்போது, கோவைக்கு வருகை தருவதை எதிர்த்து ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் சுவரொட்டி பிரச்சாரத்தை நடத்தின. போலீசு கெடுபிடிகளும் அச்சுறுத்தலும் நிலவிய சூழலில், அத்வானியின் வருகைக்கு முதல் நாளன்று இரவில்,**

**"இந்துவெறி பாசிசக் கொலைகார அத்வானியே, கோவைக்குள் நுழையாதே! மக்களை நரவேட்டையாடும் பார்ப்பன பயங்கரவாதியே, திரும்பிப் போ! ஹவாலா ஊழல் நாயகனே, உலக வங்கிக்கு நாட்டை அடகு வைக்கும் தேசத் துரோகியே, திரும்பிப் போ!" எனும் முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகள் கோவை - உடுமலை பகுதிகளிலும் பேருந்துகளிலும் ஒட்டப்பட்டன. மறுநாள், இதைக் கண்டு அலறிய போலீசார் சுவரொட்டிகளைத் தண்ணீர் ஊற்றி கிழித்து விசுவாசமாக தமது வீர தீரத்தைக் காட்டினர். குறுகிய நேரமே இருந்த போதிலும், இச்சுவரொட்டி பிரச்சாரம் காட்டுத் தீயாகப் பரவி உழைக்கும் மக்களை உணர்வூட்டியது.**

**கோவையில் இந்துவெறியூட்டி ஆதாயமடையும் நோக்கத்துடன் இந்து முன்னணி நடத்திய மாநாட்டை எதிர்த்து, இப்புரட்சிகர அமைப்புகள் சுவரொட்டிகள் - துண்டுப் பிரசுரம் மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்டன. பார்ப்பன பாசிஸ்டுகளின் அடியாட்படையான கோவை போலீசு, முன்னணித் தோழர்களைக் கைது செய்து தமது விசுவாசத்தைக் காட்டியது.**

**பார்ப்பன பாசிஸ்டுகளுக்கு எதிரான இப்பிரச்சாரம் புரட்சிகர அமைப்புகளின் உறுதிப்பாட்டை நிரூபித்துக் காட்டியதோடு, உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.**


படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் சீர்திருத்தங்கள்: பிணத்திற்கு அலங்காரம்

ஒரு பிற்போக்கான கருத்தை, மக்கள் விரோத அமைப்பை, விமர்சனங்களில் இருந்து காப்பாற்றுவதற்குப் பிற்போக்கு ஆளுங்கும்பல் கையாளும் எளிமையான வழி, அதைப் புனிதமாக்கி விடுவதுதான். தேர்தல்கள், ஓட்டுக் கட்சிகள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை இழந்து விட்ட மக்களிடம், ''ஓட்டுப் போடத் தவறக் கூடாது'' என முதலாளித்துவ அறிஞர்கள் உபதேசிக்கும் பொழுதெல்லாம், நாடாளுமன்ற ஜனநாயகம் புனிதமானது என்ற வாதத்தை அவிழ்த்துவிட்டுத்தான் மக்களை முட்டாளாக்க முயலுகிறார்கள். நாடாளுமன்ற ஜனநாயகம் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு அம்மணமாக நிற்கும் ஒவ்வொரு முறையும் இந்த மூடநம்பிக்கை பிரச்சாரம் முன்னைவிடப் பலமாக மக்களிடம் கொண்டு செல்லப்படுகிறது.

● 1989-க்குப் பிறகு நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் எந்தவொரு தேசியக் கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்கும் அளவிற்குப் பெரும்பான்மை பலம் கிடைக்காமல் தொங்குநிலை நாடாளுமன்றம் உருவானதும்;

● தொங்கு நிலை நாடாளுமன்றம் / சட்டமன்றம் உருவாகும்பொழுதெல்லாம் நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் குதிரை வியாபாரம் கனஜோராக நடப்பதும்;

● தேர்தலுக்கு முன்னால் ஒரு கூட்டணி; தேர்தலுக்குப் பின்னால் ஒரு கூட்டணி என அரசியல் கட்சிகள் சந்தர்ப்பவாத - பிழைப்புவாத கூட்டணிகளை அமைத்து ஆட்சி அமைப்பதும்;

● கிரிமினல் பேர்வழிகள் அரசியலில் புகுந்து, சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்களாக மட்டுமின்றி, அமைச்சர்களாகவும் ஆகி, போலீசு பாதுகாப்போடு வலம் வருவதும்;

● அரசியல் கட்சிகள் - அதிகாரிகள் - கிரிமினல் குற்றக் கும்பல்கள் இவர்களுக்கு இடையேயான தொடர்பு அம்பலமாகியிருப்பதும்;

● கள்ள ஓட்டுப் போடுவது, வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவது ஆகிய தேர்தல் அராஜகங்கள் தட்டிக் கேட்க முடியாதவாறு நடந்து வருவதும்

- இவையனைத்தும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு சீரழிந்து போய் விட்டதைக் காட்டும் வெளிப்பாடுகள்.

இந்த நெருக்கடிகளை முதலாளித்துவ அறிஞர்களால் மறைக்கவும் முடியவில்லை; பூசி மெழுகவும் முடியவில்லை. அவர்களால் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறைக்கு அப்பால் சிந்திக்கவும் முடியவில்லை. இதனால் இவர்கள், ''நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையில் எந்தக் கோளாறும் இல்லை; பதவி வெறி பிடித்த ஓட்டுக் கட்சிகள்தான் இந்த நெருக்கடிகளுக்குக் காரணம்'' என வாதாடுகிறார்கள். தேர்தல் மற்றும் நாடாளுமன்ற அமைப்பு முறையில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துவிட்டால், இந்த நெருக்கடிகள் அனைத்தும் தீர்ந்துவிடும்; ஓட்டுக் கட்சிகளைத் திருத்திவிடலாம்; நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையின் புனிதத்தைக் காத்துவிடலாம் எனத் தங்களைப் போலவே மக்களையும் நம்பச் சொல்கிறார்கள்.

பீகார் மாநிலத்தில் ஓட்டுக் கட்சி குண்டர்களால் சூறையாடப்பட்ட வாக்குச் சாவடி.



### தேர்தல் சீர்திருத்த சட்டங்கள்: சோளக்காட்டுப் பொம்மைகள்

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் குதிரை வியாபாரத்தைத் தடுக்கக் கட்சித் தாவல் தடைச் சட்டம்; கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் சட்டம்; தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் செலவு கணக்கைக் காட்ட வேண்டும்; வேட்பாளர்கள், தங்களின் சொத்து விவரங்கள் அனைத்தையும் வேட்பு மனுவில் குறிப்பிட வேண்டும் என்ற ஆணைகள் - இவையெல்லாம் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற அமைப்பு முறையில் தோன்றியுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள சீர்திருத்த வழிமுறைகள்.

முதலாளித்துவ அறிஞர்கள் நம்பச் சொல்கிறபடி இந்தச் சீர்திருத்தங்கள், இந்த நெருக்கடிகளைத் தீர்த்துவிட்டதா என்றால், அதுதான் இல்லை. மாறாக, அரசும், ஓட்டுக்கட்சிகளும், தேர்தல் ஆணையமும் சேர்ந்து கொண்டு பொது மக்களின் காதில் பூ சுற்றும் கதையாகத்தான் முடிந்தன.

சிறுபான்மை அரசாங்கத்தின் தலைவராகக் காலத்தை ஓட்டிவந்த நரசிம்மராவ், தனது ஆட்சியின் பெரும்பான்மையினை நிரூபிக்க, அஜித் சிங்கின் லோக்தள் கட்சியையும்; ஜார்கண்ட் முக்தி மோர்சா கட்சியையும் பணத்தை வீசியெறிந்து பிளந்தபொழுதும்;

1997-இல் கல்யாண் சிங், உ.பி. மாநிலக் காங்கிரசுக் கட்சியையும் பகுஜன்சமாஜ் கட்சியையும் உடைத்து, கட்சி மாறியவர்களுக்கு எல்லாம் அமைச்சர் பதவி கொடுத்து, உ.பி.யில் பா.ஜ.க. ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்ட பொழுதும் கட்சித் தாவல் தடைச்சட்டத்தின் ஓட்டைகள் அம்பலத்துக்கு வந்தன.

குதிரை வியாபாரத்தைத் தடுக்கக் கொண்டு வரப்பட்ட கட்சி தாவல் தடைச் சட்டம், ஒரு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தனித்



படிப்பகம்

www.padippakam.com


தனியாகக் கட்சி மாறுவதைத் தான் தடுத்ததேயொழிய, ஒரு கட்சியைச் சேர்ந்த மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கும்பலாகக் கட்சி மாறுவதைத் தடுக்கவில்லை. அதாவது, உறுப்பினர்கள் தனித்தனியாக விலை பேசப்படுவதைத் 'தடுத்த' சட்டம், அதற்கு நேர்எதிராகக் கும்பலாக விலைக்கு வாங்குவதை ஊக்குவித்தது.

''மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படியும், தேர்தல் ஆணையத்தின் 1997-ஆம் ஆண்டு ஆணைப்படியும் இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது'' - என்ற தேர்தல் சீர்திருத்த சட்டத்திலுள்ள ஓட்டைகளையும், இந்தச் சட்டத்தின் கையாலாகாத்தனத்தையும் தமிழகத்தின் புரட்சித் தலைவி போட்டு உடைத்தார்.

2001-ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தல்களின் பொழுது, ஜெயாவின் வேட்பு மனுக்கள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டன. ஏனென்றால், அப்பொழுது ஜெயா டான்சி ஊழல் வழக்கில் மூன்று ஆண்டுகள் தண்டனை பெற்ற குற்றவாளி. வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் ஜெயா அசந்து போகவில்லை. எம்.எல்.ஏ. ஆக முடியாதபடி தடுக்கப் பெற்ற குற்றவாளி ஜெயா, ''சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் முதல் மந்திரியாக நியமிக்கப்படலாம்; ஆனால், ஆறு மாதத்துக்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராகிவிட வேண்டும்'' என்ற அரசியல் சட்டவிதியைப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தின் முதல்வரானார்.

இது ஒருபுறமிருக்க, மூன்று ஆண்டுகள் தண்டனை பெற்ற ஜெயாவின் வேட்பு மனுவை நிராகரித்த தேர்தல் ஆணையம், எடமலையாறு அணைக் கட்டுத் திட்ட ஊழலில் சிக்கி ஐந்தாண்டுகள் தண்டனை பெற்ற கேரள காங்கிரசைச் சேர்ந்த பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டது.

''ஐந்தாண்டுகள் தண்டனை பெற்ற பாலகிருஷ்ணப் பிள்ளைக்கு ஒரு நீதி; மூன்று ஆண்டுகள் தண்டனை பெற்ற எனக்கு ஒரு நீதியா?'' என ஜெயா 'உரிமைக் குரல்' எழுப்பியவுடன், தேர்தல் ஆணையம், ''சட்டப் பேரவையிலோ நாடாளுமன்றத்திலோ உறுப்பினராக உள்ளவர்கள் சிறைத் தண்டனை பெற்றிருந்தாலும், அத்தண்டனைக்கு இடைக்காலத் தடை அமலில் இருந்தால், அவர்கள் தேர்தலில் நிற்கத் தடையில்லை. இதனால், கேரள சட்டமன்ற உறுப்பினர்



துப்பாக்கி முனையின் கீழ் ஓட்டுப் பதிவு: மரண வாயிலில் போலி ஜனநாயகம்.

பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டோம்'' என விளக்கமளித்து; சட்டத்திலுள்ள சந்து பொந்துகளைச் சுட்டிக் காட்டியது.

இந்த ஓட்டைகளையும், சந்து பொந்துகளையும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை, ஜெயா, பாலகிருஷ்ணப் பிள்ளை போல எல்லா கிரிமினல் வேட்பாளர்களுக்கும் உண்டு அல்லவா? அதுதானே ஜனநாயகம்!

2002-ஆம் வெளியிடப்பட்ட ஒரு புள்ளி விவரத்தின்படி, நாடெங்கிலும் உள்ள 4,120 சட்டமன்ற உறுப்பினர்களுள் 658 உறுப்பினர்கள் மீது கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்ச்சி தொடர்பான கிரிமினல் குற்றங்கள் பதிவாகியிருந்தன.

கலைக்கப்பட்ட 13-ஆவது நாடாளுமன்றத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, மோசடி ஏமாற்று ஆகிய குற்றங்களுக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்ட / தண்டனை பெற்ற 291 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 53.4 சதவீதம் பேர் கிரிமினல் பின்புலம் கொண்டவர்கள் என்றால், அச்சபையை நாடாளுமன்றம் என்பதா, இல்லை, கிரிமினல்களின் கூடாரம் என்பதா?

இந்த நிலையில், கிரிமினல் பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தல்களில் சர்வ சுதந்திரமாகப் போட்டியிடுவதை உறுதி செய்யும் வண்ணம் பா.ஜ.க. கூட்டணி அரசு, ''தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களின் கல்வித் தகுதி, சொத்து விபரம், கிரிமினல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக எந்த விவரத்தையும் வேட்பு மனுவில் குறிப்பிட வேண்டியதில்லை'' என்ற சட்டத்தை கடந்த ஆண்டு கொண்டு வந்தது.

இதனால் நாடாளுமன்றமே கிரிமினல்களின் கூடாரமாகி விடும் என அரண்டு போன 'ஜனநாயகவாதிகள்' இந்தச் சட்டத்திற்கு எதிராக தொடுத்த வழக்கையடுத்து, உச்சநீதி மன்றம் இச்சட்டத்தை ரத்து செய்து, அவ்விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என உத்திரவிட்டது. இந்த உச்சநீதி மன்ற ஆணை, கிரிமினல்கள் வேட்பாளராகப் போட்டியிடுவதைத் தடை செய்யவில்லை (இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற கிரிமினல்கள்தான் தேர்தலில் போட்டியிட முடியாது) என்றாலும், வேட்பாளர் மீது நடந்துவரும் கிரிமினல் வழக்குகள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளும் உரிமையை வாக்காளர்களுக்கு வழங்குகிறது; அப்படிபட்ட வேட்பாளர்களுக்கு ஓட்டுப் போடாமல் புறக்கணித்துவிடும் வாய்ப்பை வாக்காளர்களுக்கு வழங்குகிறது எனத் தேர்தல் சீர்திருத்தவாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய விவரங்களை வாக்காளர்கள் எப்படி தெரிந்து கொள்வது என்றால், எங்களின் இணைய தளத்தைப் பாருங்கள் என்கிறது தேர்தல் ஆணையம். அரைகுறையாகப் படித்த கிராமப்புற ஏழைகள் நிறைந்த நமது நாட்டில், இணைய தளத்திற்குப் போய் விவரங்களைப் பார்ப்பது எந்தளவிற்கு நடைமுறையில் சாத்தியமாகும் என்பதை இந்த அதிகாரவர்க்க முட்டாள்கள் யோசித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. எனவே, இந்த உச்சநீதி மன்ற


படிப்பகம்

www.padippakam.com

ஆணை அலங்கார ஜோடனையாகவே இருக்கும்!

வாக்காளர்கள் இணைய தளத்திற்குப் போய்ப் பார்க்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம்; அதனால், என்ன நடந்துவிடும்? ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுள் ஒருவர் கிரிமினல் பின்னணி கொண்டவராக இருந்தால், அவரைப் புறக்கணித்துவிட்டு, வேறொரு வேட்பாளருக்கு வாக்குப் போடலாம். ஆனால், ஓட்டுக் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்களுள் பெரும்பாலோர் திடீர்ப் பணக்காரர்களாக, சாதி பிரமுகர்களாக, பச்சோந்திகளாக, கிரிமினல் பின்னணி கொண்டவர்களாக இருக்கும் பொழுது, வாக்காளர்களால் என்ன செய்ய முடியும்?

ஒன்று, பார்ப்பன சோ போன்ற நடுநிலையாளர்கள் உபதேசிக்கிறபடி, ஓநாய்க்கு நாய் பரவாயில்லை என முடிவு செய்து, ''ரொம்ப மோசமில்லை'' என்ற வேட்பாளருக்கு வாக்களிக்கலாம்; இல்லையென்றால், வாக்காளர் தனது வாக்குரிமையைத் தியாகம் செய்துவிட வேண்டியதுதான்!

## தேர்தல் ஆணையம் நடுநிலையானதா?

ஓட்டைகளே இல்லாமல் சட்டங்கள் கொண்டு வந்தால், கள்ள ஓட்டுப் போடுவது; வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவது; கிரிமினல்கள் வேட்பாளர்களாக நிற்பதையும், குதிரை வியாபாரத்தையும் தடுத்து விடலாம் என்று யாராவது நம்பினால், அதை பகற்கனவென்றுதான் சொல்ல முடியும்.

கள்ள ஓட்டுப் போடுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக, வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டால், வாக்காளர் என்று நிருபிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருந்தால்தான் வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியது. இப்படி கள்ள ஓட்டைத் தடுக்க கட்டுப்பாடுகள் போட்ட அதே தேர்தல் ஆணையம், ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலின்பொழுது என்ன செய்தது? கிராம நிர்வாக அலுவலர் (V.A.O) தரும் சான்றுகளைக் காட்டிக் கூட வாக்களிக்கலாம் என்ற சலுகையினை வழங்கி, ஆளும் அ.தி.மு.க. கும்பல் கள்ள ஓட்டுப்போட வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவிப்பை வெளியிட்ட பிறகு, மைய / மாநில அரசுகள் எந்தவொரு புதிய நலத் திட்டத்தையும் அறிவிக்கக் கூடாது என்பது தேர்தல் நடத்தை விதி. ஆனால், சாத்தான் குளம் இடைத் தேர்தலின் பொழுது, தேர்தல் ஆணையமே இந்த விதியைத் தளர்த்தி அ.தி.மு.க. அரசுக்கு சலுகை காட்டியது.

''அத்தொகுதியில் விவசாயிகளுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தைத் தேர்தல் ஆணையம் தடுத்து, பின்னர் அனுமதித்ததே முறைகேட்டின் ஆரம்பம்'' எனக் குறிப்பிட்டார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. தேர்தல் ஆணையத்தின் இந்தச் சிறப்பு சலுகையைப் பயன்படுத்திக் கொண்ட அ.தி.மு.க., இத்திட்டத்திற்கான கூப்பன்களில் ''ஜெயலலிதா அரசின் திட்டம்'' என அச்சிட்டு, வாக்காளர்களுக்கு வலை வீசினர்.



1990-இல் அயோத்தி பிரச்சினையை முன்வைத்து, அத்வானி நடத்திய ர(த்)த யாத்திரை.

சாத்தான் குளம் இடைத் தேர்தலின் பொழுது, ஜெயா - தேர்தல் ஆணையம் - போலீசு அதிகாரிகள் என்ற கள்ளக் கூட்டணி நடத்திய தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்திய தி.மு.க., அத் தேர்தலில் போட்டியிடாமல் புறக்கணித்தது.

தேர்தலை நடத்தக் கூடிய தேர்தல் ஆணையத்தையே ஜெயா போன்ற பாசிஸ்டுகள் விலைக்கு வாங்கி விடுவார்கள் என்று நிருபணம் ஆன பிறகு, இந்த நாட்டில் தேர்தல்கள் சட்டபூர்வமாகவும் ஜனநாயகப்பூர்வமாகவும் நாணயமாகவும் நடைபெறும் என்று எதை வைத்து நம்ப முடியும்?

## சட்டம் ''கடமை''யைச் செய்யவில்லை

தேர்தல் சட்டத்தின்படி மத வேறுபாடுகளை, சாதி வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடாது; இப்படி பிரச்சாரம் செய்து எந்த வேட்பாளராவது வெற்றி பெற்றிருந்தால், அவரது தேர்தல் வெற்றியை ரத்து செய்ய தேர்தல் ஆணையத்திற்குச் சட்டப்படி உரிமையுண்டு. தேர்தல் ஆணையம் இந்தச் சட்டத்தை கறாராக அமல்படுத்தியிருந்தால், பா.ஜ.க.விற்கு நாடாளுமன்றத்திலோ / மாநில சட்டமன்றங்களிலோ ஒரு இடம் கூட இருந்திருக்க முடியாது. ஆனால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அக்கட்சிக்கு 182 இடங்கள் இருந்தன. மத நல்லிணக்கத்தைப் பிரச்சாரம் செய்தா பா.ஜ.க., இத்தனை இடங்களைக் கைப்பற்றியது?

இதைக்கூட விட்டு விடுவோம். பா.ஜ.க., முசுலீம் பிணங்களின் மீதேறித்தான் குஜராத்தில் ஆட்சியைப் பிடித்தது என்பது உலகமே அறிந்த உண்மை. அப்படிப்பட்ட இந்து மதவெறி பிடித்த ஆட்சியின் மீது இந்தத் தேர்தல் சட்டம் பாயவில்லை என்றால், ஓட்டை சட்டத்தில் மட்டும் இல்லை; இந்திய ஜனநாயகத்திலேயே இருக்கிறது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும்.

சிவசேனாவின் பால் தாக்கரே, விசுவ இந்து பரிசத்தின் அசோக் சிங்கால், பிரவீண் தொகாடியா இவர்கள் மீது முசுலீம் எதிர்ப்பு - இந்து மதவெறியைத் தூண்டி விட்டு பேசி வருவதற்காக பல்வேறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆனாலும், மகாராஷ்டிரா மாநிலத்தில் பால் தாக்கரேதான் தேர்தல் பிரச்சாரத்தின் நட்சத்திர பேச்சாளர்; வி.இ.ப.வும், இந்து முன்னணியும், ராமர் கோயில் கட்ட பா.ஜ.க.விற்கு ஓட்டுப் போடுங்கள் என வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்கின்றன. இவர்களின் பிரச்சாரத்தைத் தடை செய்யக் கூடத் திராணியற்றுப் போய்க் கிடக்கிறது தேர்தல் ஆணையம்.



படிப்பகம்

www.padippakam.com

காசுமீரில் வெற்றிகரமாகத் தேர்தலை நடத்திவிட்டதாகப் பீற்றிக் கொள்ளும் தேர்தல் ஆணையத்தால், தமிழகத்தின் பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியவில்லை. காசுமீரில் முசுலீம் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் பாய்கிறது; ஆனால், பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் பஞ்சாயத்துத் தேர்தலைக் கேலிக் கூத்தாக்கி வரும் மேல்சாதி வெறியர்களுக்கு எதிராகச் சாதி வெறியைத் தூண்டுவதைத் தண்டிக்கும் சட்டம் கூடப் பாய மறுக்கிறது.

தேர்தல் பிரச்சாரத்தின்பொழுது தனிநபரைத் தரக்குறைவாகத் தாக்கிப் பேசக்கூடாது என்பது தேர்தல் நன்னடத்தை விதி. ஆனால், பா.ஜ.க.வின் பிரச்சாரமோ சோனியாவை வெளிநாட்டவர் எனத் திட்டித் தீர்ப்பதில்தான் குறியாக உள்ளது. ஜெயாவோ இன்னும் ஒரு படி மேலே போய், சோனியாவின் ''பதி பக்தி''யையும் சந்தேகப்பட்டுப் பிரச்சாரம் செய்கிறார்.

அவர்களே கூறிக் கொள்ளும் நன்னடத்தை விதிகளுக்கு எதிராக அ.தி.மு.க. - பா.ஜ.க. பிரச்சாரம் அமைந்துள்ள போதிலும், தேர்தல் ஆணையம் இந்த ஆளும் கட்சிகளுக்கு எதிராக ஒரு சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லை. மாறாக, இந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுப்பதை செய்தி - ஒலிபரப்புத் துறை அமைச்சகத்திடம் தள்ளிவிட்டு நழுவிக் கொள்ள முயன்றது.

ஒரு சாதாரண நன்னடத்தை விதியையே கறாராக அமல்படுத்த முடியாத தேர்தல் ஆணையம், தனது சுயாட்சி அதிகாரங்களைப் பயன்படுத்தி தேர்தல் சீர்கேடுகளை ஒழித்து விடுவோம் என நம்மை நம்பச் சொல்கிறது. கூறை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போன கதைதான் இது!

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் ரூ. 25 இலட்சம் வரைதான் தேர்தல் செலவு செய்ய வேண்டும் என்பது தேர்தல் சட்ட விதி. போட்டியிடும் வேட்பாளர், மூன்று நாட்களுக்கு ஒருமுறை தனது தேர்தல் செலவை, தேர்தல் ஆணையம் நியமிக்கும் தணிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்; இந்தச் செலவை வருமான வரி அதிகாரிகளும் பரிசோதனை செய்வார்கள் என்றெல்லாம் வேட்பாளர்களின் தேர்தல் செலவைக் கட்டுப்படுத்த கெடுபிடிகள் - கட்டுப்பாடுகள் இருந்தாலும், இச்சட்டம் படுதோல்வியடைந்து என்பது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது. இதனால், தேர்தல் சீர்திருத்தவாதிகள் அனைவரும் வேட்பாளரின் தேர்தல் செலவை நிர்ணயித்து, அதனை அரசே கொடுத்துவிட வேண்டும் எனக் கோருகிறார்கள்.



விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை ஆதரிக்கும் தலைமை தேர்தல் ஆணையர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ''சீட்டு'' கேட்கும் பெற்றோர்களிடம் ''டொனேஷன்'' கேட்பதுபோல, ஓட்டுக் கட்சிகள் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சிக்காரனிடம் நன்கொடை கேட்கின்றன. அந்த நன்கொடை செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளுமா? தேர்தல் செலவுக்கு அரசாங்கத்திடம் நிதி வாங்கிக் கொள்ளும் வேட்பாளர், தனது வெற்றிக்காக கைக் காசையும் செலவழிக்க மாட்டார் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

அரசாங்கம் தேர்தல் நிதி அளித்தால், அந்த வரவு-செலவு கணக்குகளைக் கண்காணிக்க ஒரு அதிகார வர்க்கக் கூட்டம் தேவைப்படும்; இப்பொழுது பொய்க்கணக்கு காட்டும் வேட்பாளர், அப்பொழுது கள்ளக் கணக்கு எழுத மாட்டார் என்பதற்கும்; இப்பொழுது போலவே அப்பொழுதும் அதிகார வர்க்கம் தேர்தல் செலவுகளைக் கண்டும் காணாமல் நடந்து கொள்ளாது என்பதற்கும் என்ன உத்தரவாதம் இருக்கிறது? எனவே, அரசு நிதி உதவி செய்தால், தேர்தல் செலவைக் கட்டுப்படுத்தி விடலாம் என்பது ஒரு மூடநம்பிக்கை.

ஒரு வாக்காளர், தனது பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், அவர் தொலைபேசி மூலம் தேர்தல் அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள வேண்டுமாம்; இதன் பிறகு, அவர், தான் தகுதியான வாக்காளர் என்பதை நிரூபிப்பதற்குத் தேவையான சான்று ஆதாரங்களைப் பெற இன்னொரு அதிகாரியிடம் போக வேண்டும். அதற்கு அதிகாரி கேட்கும் ஆதாரங்கள் வாக்காளரிடம் இல்லாவிட்டால் அதனைப் பெற வேறொரு அதிகாரியிடம் போக நேரிடும். வாக்குச் சாவடியில், இந்தச் சான்று ஆதாரங்களை வேறொரு அதிகாரி பரிசோதித்துத் திருப்தி அடைந்தால்தான் ஓட்டுப் போட முடியும். கள்ள ஓட்டினைத் தடுப்பது என்ற தேர்தல் சீர்திருத்த முறை, இப்படியாக மக்களின் வாக்குரிமையை அதிகார வர்க்க சிகப்பு நாடாவிற்குள் கட்டிப் போட்டுவிட்டது.

இது ஒருபுறமிருக்க, தேர்தல் வன்முறைகளைத் தடுக்கத் தெருவுக்குத் தெரு நிறுத்தப்படும் துப்பாக்கி ஏந்திய போலீசை, துணை இராணுவப் படைகளைப் பார்க்கும் வாக்காளனுக்குப் பாதுகாப்பு உணர்வைவிட, பய உணர்ச்சிதான் ஏற்படுகிறது. இதன் காரணமாக, தகுதியான வாக்காளர்கள்கூட, ஓட்டுப் போடுவதைத் தவிர்த்து விடுகின்றனர்.

### தேர்தல் புறக்கணிப்பும் வேட்பாளர் புறக்கணிப்பும்

ஒவ்வொரு தேர்தலின் பொழுதும் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவதைக் கண்டு அலறும் இரா. செழியன் போன்றவர்கள், ''தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை என்பதை வாக்காளர்கள் பதிவு செய்வதற்கு ஏற்றவாறு வாக்குப் பதிவில் மாற்றம் வேண்டும்'' எனக் கோருகிறார்கள்; இந்த மாற்றத்தைச் செய்தால், தேர்தல் அராஜகங்களைக் கண்டு வாக்குப் போடாமல் ஒதுங்கிப் போகும் வாக்காளர்கள், தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்ய முன் வருவார்கள். ஓட்டுக் கட்சிகள் இந்த எதிர்ப்பைக் கண்டு அஞ்சி, தங்களை மாற்றிக் கொள்ளும் என அவர்கள் ''நல்ல காலத்துக்கு'' வழி சொல்கிறார்கள்.

முதலாவதாக, இந்தச் சீர்திருத்தம் ஒன்றும் புதிய விசயமல்ல; தேர்தல் சட்டம் 49-ஓ பிரிவின்படி, எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்குப் போட விரும்பவில்லை என்பதனை வாக்காளர்கள் பதிவு செய்யும் உரிமை ஏற்கெனவே இருந்து வருகிறது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் இதற்காக ஒரு பட்டனைச் சேர்ப்பதன் மூலம், இந்தப் பழைய சட்டத்திற்கு புதிய ஜோடனை செய்கிறார்கள்.

ஓட்டுப் போடாமல் ஒதுங்கிப் போகும் வாக்காளர்கள் அனைவரும் இந்தப் பட்டனைத் தட்டினால் கூட, கிரிமினல் பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தலில் நின்று, வென்று நாடாளுமன்றத்திற்குப் போவதைத் தடுத்துவிட

www.padippakam.com

முடியாது. ஓட்டுக் கட்சிகளுக்கு நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம், கட்சிகள் அதனைத் தீர்க்க அராஜகத்தைத்தான் கையில் எடுத்துக் கொள்கின்றன. ஆனால், இவர்களோ, வாக்காளர்கள் ஓட்டுக் கட்சிகளுக்கு நெருக்கடி கொடுத்தால், அவை ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விடும் எனக் கதை விடுகிறார்கள். அராஜகத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரும் அரசியல் துணிவில்லாதவர்கள் தேடும் சட்டபூர்வ சந்துதான் இந்தச் சீர்திருத்தம்.

தேர்தலைப் புறக்கணிக்கக் கோரும் புரட்சியாளர்கள், இந்த ஓட்டுச் சீட்டு அரசியலுக்கு மாற்றாக, ''மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்'' என்ற புரட்சிகர அரசியலை மக்கள் முன் வைக்கிறார்கள். ஆனால், வேட்பாளர்களைப் புறக்கணிக்கக் கோரும் சீர்திருத்தவாதிகளோ, மக்களை அரசியலற்ற நிராயுதபாணிகளாக, பிழைப்புவாத - கிரிமினல் அரசியல் முன் நிறுத்துகிறார்கள்.

**தேர்தல் முறையில் மாற்றம் புதிய மொந்தை பழைய கள்ளு**

''தற்பொழுதுள்ள தேர்தல் முறைக்குப் பதிலாக, விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறையைக் கொண்டு வர வேண்டும்'' எனக் கோருகிறார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தியும் சென்னையில் நடந்த கூட்டமொன்றில், இந்த மாற்றத்தை வெளிப்படையாக ஆதரித்துப் பேசியிருக்கிறார்.

நாடாளுமன்ற / சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் மொத்த வாக்குகளின் அடிப்படையில் இடங்களை ஒதுக்குவதுதான் விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறை. இந்தத் தேர்தல் முறை வந்துவிட்டால், ''ஓட்டுக் கட்சிகள் கிரிமினல்களுக்குப் பதிலாகப் படித்தவர்களை, பண்புள்ளவர்களை அனுப்பி வைக்கும்; தனிநபரைத் தாக்குவது, கவர்ச்சி முழக்கங்களை முன் வைப்பது போன்றவற்றையெல்லாம் கைவிட்டு விட்டு, ஓட்டுக் கட்சிகள் கொள்கையைப் பேசிப் பிரச்சாரம் செய்வார்கள்; வாக்குக் கேட்பார்கள்'' என இந்தத் தேர்தல் முறையின் 'சிறப்புகளை' அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத்தில், மெத்தப் படித்த மேதாவிகள் 100 பேர் உறுப்பினர்களாய் இருந்துள்ளனர். மேலும், படித்த, பண்புள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு வருவதற்குத்தான் நாடாளுமன்ற மேலவை இருக்கிறது. எனவே, படித்த, பண்புள்ளவர்களை உறுப்பினர்களாய்த் தேர்ந்தெடுக்கவே தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என்பதற்கு அவசியமே இல்லை.

நாடாளுமன்ற மேலவையிலும், கீழவையிலும் படித்த, பண்புள்ள உறுப்பினர்கள் கணிசமாக இருந்த பின்னும், கடந்த ஆட்சியில் ஊழலே இல்லாமல் போய்விட்டதா? மக்கள் விரோத பட்ஜெட்டுகளையும், சட்டங்களையும் இவர்களின் ஒப்புதலோடு நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லையா? எனவே, தேர்தல் முறை மாறினாலே, நாடாளுமன்றத்தின் முகமே மாறிவிடும் என்பது முழுப் பொய்.

இப்பொழுது, ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றி பெறுவதற்காக தேர்தல் அராஜகங்களில் ஈடுபடும் ஓட்டுக் கட்சிகள், தேர்தல் முறை மாறினால், மற்ற ஓட்டுக் கட்சிகளைக் காட்டிலும் அதிகமான வாக்குகளை வாங்குவதற்கு தேர்தல் அராஜகங்களில் ஈடுபடத்தான் செய்வார்கள்.

> ***கள்ள ஓட்டினைத் தடுப்பது என்ற தேர்தல் சீர்திருத்த முறை, மக்களின் வாக்குரிமையை அதிகார வர்க்க சிகப்பு நாடாவிற்குள் கட்டிப் போட்டு விட்டது.***

விகிதாச்சார தேர்தல் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சி / உறுப்பினர்கள் ஊழலிலோ, கிரிமினல் குற்றங்களிலோ ஈடுபட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? ஆட்சிக் கவிழ்ப்போ, குதிரை வியாபாரமோ, நாடாளுமன்ற ரௌடித்தனங்களோ நடக்காது என்பதற்கு என்ன அடிப்படை இருக்கிறது?

விகிதாச்சார தேர்தல் முறை வந்துவிட்டால், ஓட்டுக் கட்சிகள் கொள்கையைப் பேசி ஓட்டுக் கேட்பார்களாம். தனியார்மயம் - தாராளமயம் என்ற மக்கள் விரோதக் கொள்கையைத் தவிர, வேறு என்ன கொள்கை ஓட்டுக் கட்சிகளிடம் இருக்கிறது? தேர்தல் முறை மாறினால், இந்தக் கொள்கையின் மக்கள் விரோதத் தன்மையும் மாறிவிடுமா?

முதலாளித்துவ அறிஞர்களைப் பொருத்தவரை தேர்தலில் ஓட்டுப் போடுவதுதான் மிகப் பெரிய ஜனநாயகம். அதனால்தான் புழுத்து நாறிப் போய்விட்ட இந்தத் தேர்தல் முறையை எப்படியாவது சீர்திருத்திவிடத் துடிக்கிறார்கள். எதைத் தின்றால் பித்துத் தெளியும் என அலைகிறார்கள்.

அவர்களைப் பொருத்தவரை அனைத்தும் சட்டப்படி நடக்க வேண்டும். ஜனநாயகத்தையும் அவர்கள் சட்டவாதமாகத்தான் குறுக்கிப் பார்க்கிறார்கள். அதனால்தான், இந்தளவிற்கு நாடாளுமன்ற அராஜகங்களோ, ரௌடித்தனங்களோ, தேர்தல் வன்முறைகளோ நடக்காத காமராஜ், நேரு ஆட்சியைப் பொற்கால ஆட்சி என்கிறார்கள்.

அந்தப் பொற்கால ஆட்சியில் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சவுக்கடியும், சாணிப் பாலும் தண்டனையாகத் தரப்பட்டதையும், ஒரு அவுன்சு அரிசிக்காக மக்கள் ரேசன் கடைகளில் காத்துக் கிடந்ததையும் மறந்துவிட முடியுமா? காமராசர் பண்ணையார் வீடுகளில் நடத்திய சாதி அரசியல் தான் இன்று தெருவில் அம்மணமாக ஓடுகிறது. அன்றைய பொற்காலம்தான் இன்றைய அராஜகமாக வளர்ந்திருக்கிறது.

அதாவது, இந்தியாவின் சமூகப் பொருளாதாரக் கட்டுமானம்தான், இன்றைய அரசியல் நெருக்கடியின், சீரழிவின் வேராக இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகம், தனியார்மயம் - தாராளமயம், பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகள், அரசியல் கிரிமினல்கள் இவை ஒவ்வொன்றுமே ஒன்றுக்கொன்று ஜாடிக்கேத்த மூடியாகத்தான் இருக்கின்றன. எனவே, இதனைப் புரட்டிப் போடாமல், இந்த அரசியல் சீரழிவைத் தடுக்க முடியாது. இதனைத் தொடாமல் கொண்டு வரப்படும் தேர்தல் சீர்திருத்தங்கள் யாவும் அழுகி நாறும் பிணத்திற்கு அலங்காரம் செய்வதைப் போன்றவைதான்!

போலி ஜனநாயகத் தேர்தலுக்குப் பதிலாக புரட்சி; நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறைக்குப் பதிலாக மக்கள் சர்வாதிகார மன்றங்கள்; தனியார்மயம் - தாராளமயத்திற்குப் பதிலாக, ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியப் பொருளாதாரக் கொள்கை என்ற புரட்சிகர திட்டம் மட்டும்தான் இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவு கட்டி புதிய இந்தியாவைப் படைக்கும்!

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# 40 தொகுதி வேட்பாளர்களின் முகவிலாசம் இங்கே! வெளக்குமாறு எங்கே?

"உலகின் மிகப்பெரும் ஜனநாயகத் தேர்தல்" சூறாவளியைப் போல் இந்தியா முழுக்க சுழன்றடிக்கிறது. இதில் வேரோடு முதலில் சாய்ந்தது, தேர்தல் கமிஷனின் தேர்தல் விதிமுறைகள்! தேர்தல் அதிர்வில் இதெல்லாம் சகஜம் என்கிறார்கள், முதலாளித்துவ தேர்தல் அரசியல் வல்லுநர்கள். பணமூட்டைகளின் துணையுடன் கொடிகட்டிப் பறக்கின்ற சாதி அரசியல், வாரிசு அரசியல், பொறுக்கி அரசியல்களை வீழ்த்த மக்கள் தான் விழிப்பாகச் செயல்பட வேண்டும் என்கின்றனர். "தேர்தல் விழிப்புணர்வு" உபதேசங்கள் மூலம் நரகலில் நல்லரிசி தேடும் கலையை மக்களுக்குக் கற்று தருகிறார்கள். நாங்களும் இந்த 'ஜனநாயக'க் கடமையில் பங்கேற்று, தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் தகுதிகளைப் பார்வைக்கு வைக்கிறோம்.

**தொகுதி: மத்திய சென்னை**

***கட்சி:*** அ.தி.மு.க.; ***வேட்பாளர்:*** பால கங்கா; ***தகுதி:*** சென்னை பகுதி கிரிமினல் - பொறுக்கி கும்பல்களின் குண்டர்படைத் தலைவர்; எம்.ஜி.ஆர். ஆட்சியில் அடியாளாயிருந்த மதுசூதனனிடம் 'தொழில்' கற்றவர்; குடிசை மாற்று வாரியத் தலைவர்; சென்னை நகர மேயர் தேர்தலில் ஸ்டாலினிடம் தோற்று, அதிகார பசியில் இருப்பவர்.

***கட்சி:*** தி.மு.க.; ***வேட்பாளர்:*** தயாநிதி மாறன்; ***தகுதி:*** சாகும்வரையில் மத்திய அமைச்சராயிருந்த முரசொலி மாறனின் மகன்; கருணாநிதியின் குடும்ப வாரிசு என்பதைத் தவிர வேறு அரசியல் கறை படாமல் கவனமாக வாழ்ந்தவர்; பிரபல 'சன்' தொலைக்காட்சி நிறுவனத்தின் பங்குதாரர்; சென்னையின் ஏகபோக கேபிள் டி.வி., எஸ்.சி.வி.யின் உரிமையாளர்.

**தொகுதி: தென் சென்னை**

***கட்சி:*** அ.தி.மு.க.; ***வேட்பாளர்:*** பதர் சையத்; ***தகுதி:*** ஜெயலலிதாவின் 'கான்வென்ட்' தோழி; தமிழை எழுத படிக்கத் தெரியாதவர்; "அம்மாவுக்கு என்னா புட்க்கும். உண்மாய், நாண்யம், உழைப்பு இந்த மூணும் எங்கிட்ட இருக்கு... டமில் நாட்க்காக எழிங்கள்க்காக ஒழைப்பேன்" என்று மேடையில் அண்ணாயிசம் பேசி ஓட்டு கேட்கிறார்.

***கட்சி:*** தி.மு.க.; ***வேட்பாளர்:*** டி.ஆர். பாலு; ***தகுதி:*** மாண்டுபோன கருணாநிதியின் மனசாட்சி முரசொலி மாறனின் நிழல்; பெரும் தொழிலதிபர்; பளிங்கு கற்கள், ரசாயனத் தொழிற்சாலைகள், மீன்பிடி கப்பல்கள் மற்றும் இறால் பண்ணைகளின் உரிமையாளர்; பன்னாட்டு நிறுவனம் போல் இயங்கும் தி.மு.க. மற்றும் கருணாநிதி குடும்பத்தின் கணக்குப் பிள்ளை.

**தொகுதி: சிதம்பரம்**

***கட்சி:*** பி.ஜே.பி; ***வேட்பாளர்:*** "தடா" பெரியசாமி; ***தகுதி:*** காஞ்சி மட ஜெயேந்திரனின் அடிவருடி; தலித் மக்களை பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு காட்டிக் கொடுக்கும் துரோகி; "தலித்துகள் ஹிந்துக்கள் தான்" என்று குரைக்கும் சங்கரமடத்து விசுவாச நாய்!

***கட்சி:*** மக்கள் கூட்டணி; ***வேட்பாளர்:*** தொல். திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலர்); ***தகுதி:*** கூட்டணிக்காக தி.மு.க.வின் பின்னால் ஓடிக் களைத்தவர். "மக்கள் கூட்டணி" என்று புதிய கடை திறந்திருக்கிறார். புதிய கடையின் பங்குதாரர்களாகத் தேவர் சாதி தலைவர் சேதுராமன், யாதவர் சாதி தலைவர் கண்ணப்பன் ஆகியோரை நியமித்திருக்கிறார்.

**கருணாநிதி பேரன் தயாநிதி மாறனின் எம்.ஜி.ஆர். பாணி கவர்ச்சி அரசியல்.**



**தொகுதி: தர்மபுரி**

***கட்சி:*** பி.ஜே.பி; ***வேட்பாளர்:*** பு.த. இளங்கோவன்; ***தகுதி:*** பா.ம.க.விலிருந்து கட்சி மாறியவர். பா.ம.க.வில் இரண்டாம் மட்டத் தலைவராக இருந்தவர். பா.ம.க. கட்சித் தலைவர் ராமதாசு குடும்பத்தின் சொத்து குவிப்பு இரகசியங்களை அறிந்தவர். தானே ஒரு புதுக் கோடீசுவர அரசியல்வாதி. 'கஞ்சா பாபா' ரஜினியின் ஆதரவு பெற்றவர்.

***கட்சி:*** பா.ம.க; ***வேட்பாளர்:*** டாக்டர் செந்தில்; ***தகுதி:*** இராமதாசின் வாரிசு அன்புமணியின் நெருங்கிய கூட்டாளி.

"சிறைக்குச் செல்ல வன்னிய சொந்தங்கள் டில்லிக்குச் செல்ல குடும்பச் சொந்தகளா" என்று சுவரொட்டி ஒட்டி இவருடைய 'கிளினி'க்கை அடித்து நொறுக்கினர், உள்ளூர் பா.ம.க.வினர்.

**தொகுதி: கோவை**

***கட்சி:*** பி.ஜே.பி; ***வேட்பாளர்:*** சி.பி. ராதாகிருஷ்ணன்; ***தகுதி:*** ஜனசங்கத்தில் மாணவரணித் தலைவராக இருந்தவர்; கோவை கலவரத்திற்குத் திட்டம் வகுத்து கொடுத்தவர். தற்போது தொழிலாளர்களிடம் ஓட்டுப் பொறுக்கவும், முசுலீம் மக்களின் அனுதாபம் பெறவும் பார்ப்பன நரித்தனத்தில் இறங்கியுள்ளார். தான், "இந்து விரோதி" என்று ஆர்.எஸ்.எஸ். மூலம் பிரச்சாரம் செய்கிறார்.

***கட்சி:*** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி; ***வேட்பாளர்:*** சுப்பராயன்; ***தகுதி:*** முதலாளிகளே விரும்பும் தொழிற்சங்கவாதி; இரு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். "அம்மா வாழ்க... ஆட்டுக்குட்டி வாழ்க என்று கோஷம் போடும் பா.ஜ.க.வினர்" என்று கிண்டலடிப்பவர். தாங்களும் "அம்மா வாழ்க" என்று கோஷம் போட்டதை மக்கள் மறந்துவிட்டார்கள் என்று தைரியமாக இருப்பவர்.

**தொகுதி: திருச்செந்தூர்**

***கட்சி:*** தி.மு.க.; ***வேட்பாளர்:*** ராதிகா செல்வி; ***தகுதி:*** தமிழக போலீசால் சுட்டுக்



படிப்பகம்

www.padippakam.com




நடிகையின் தொப்புளைக் காட்டி சுத்தி - அரிவாளுக்கு ஓட்டுக் கேட்கும் 'மார்க்சிஸ்டு'கள்: மானங்கெட்ட பிழைப்பு.

கொல்லப்பட்ட அரசியல் ரவுடி வெங்கடேச பண்ணையாரின் மனைவி. சாத்தான்குளம், சைதாப்பேட்டை இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. சார்பாக வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றிய கிரிமினல்தான் வெங்கடேச பண்ணையார். இப்போது அவரை தியாகி என்றும், அவருடைய மனைவியான இளம் விதவையைக் காட்டி ஒப்பாரி வைத்தும் ஓட்டுக் கேட்கிறார் கருணாநிதி.

***கட்சி:*** அ.தி.மு.க.; ***வேட்பாளர்:*** தாமோதரன்; ***தகுதி:*** சுயதகுதி ஏதும் இல்லை; ஜெயலலிதாவே நேரடியாக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மூலம் தேர்தல் வேலை செய்கிறார்.

**தொகுதி: புதுக்கோட்டை**

***கட்சி:*** தி.மு.க.; ***வேட்பாளர்:*** ரகுபதி; ***தகுதி:*** அ.தி.மு.க.வில் மந்திரி பதவி அனுபவித்து கருணாநிதியின் கடந்த ஆட்சியின்போது தி.மு.க.வுக்குத் தாவியவர்; கறுப்புப் பண முதலை, தமிழ் திரைப்படங்கள் தயாரிப்பில், பினாமிகள் மூலம் முதலீடு செய்பவர். ''பணத்தைக் காட்டியே சீட்டு வாங்கியவர்'' என்று தி.மு.க. தலைவர்களையே புலம்ப வைத்தவர்.

***கட்சி:*** அ.தி.மு.க.; ***வேட்பாளர்:*** ரவிச்சந்திரன்; ***தகுதி:*** அரசு வழக்கறிஞர்; கூடவே சாராய முதலைகளுக்கும் வழக்கறிஞர். லாரி க்ளீனராகயிருந்த ராமலிங்கம் என்ற திடீர் சாமியாரின் பக்தன். அத்தொகுதியின் 'நிரந்தர' உறுப்பினராகயிருந்த 'திருநாவுக்கரசர் அரசியல் வாழ்வு, ரவிச்சந்திரன் வெற்றியில் தங்கியுள்ளது' என்கின்றனர், பி.ஜே.பி. கட்சியினர்.

**தொகுதி: திண்டிவனம்**

***கட்சி:*** பா.ம.க.; ***வேட்பாளர்:*** தன்ராஜ்; ***தகுதி:*** ராமதாசின் சகோதரி மகன்; கருணாநிதிக்கு முரசொலி மாறன் போன்று இவர் ராமதாசின் மனசாட்சி; டில்லியில் அலுவலகம் வைத்துக் கொண்டு பா.ம.க. அமைச்சர்களைக் கண்காணித்தவர். பா.ம.க. மந்திரிகளின் சார்பில் முதலாளிகளிடம் பேரம் பேசும் தரகராக இருந்தவர்.

***கட்சி:*** அ.தி.மு.க.; ***வேட்பாளர்:*** அருண்மொழி தேவன்; ***தகுதி:*** ஜெ.பேரவை செயலர். வழக்கறிஞர்; கொளப்பாக்கம் நேர்காணலின் போது ஜெயலலிதாவால் நேரடியாகச் சோதிக்கப்பட்டவர்.

●●●

பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் டி.டி.வி. தினகரன், ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் அண்ணன் மகன்; சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவர்; 'ஹவாலா' தொழில் மற்றும் கடல்கடந்த கிரிமினல்களுடன் தொடர்பு உள்ளவர்.

அ.தி.மு.க. வேட்பாளர்கள் அனைவரும் பாசிச ஜெயாவால், சென்னை - கொளப்பாக்கம் நேர்காணல் தொழுவத்தில் சோதிக்கப்பட்டவர்கள். வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கும் 33 பேரில் 31 பேர் புதியதாக மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்பட்டவர்கள்.

மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தென்காசி, திருச்செந்தூர் - ஆகிய தொகுதிகளின் அ.தி.மு.க. வேட்பாளர்களில் பலர் வழக்கறிஞர்கள். இவர்கள் அனைவரும் கருணாநிதி ஆட்சியில் ஜெயலலிதா கைது செய்யப்பட்ட போது அதை எதிர்த்து சிறை சென்றவர்கள். குறிப்பாக, கோபி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர், என்.ஆர். கோவிந்தராஜன் ஜெயலலிதா கைது செய்யப்பட்டபோது தீக்குளிக்க முயன்று போலீசால் கைது செய்யப்பட்டவர். அதாவது, பாசிச ஜெயாவின் பல்லக்கு தூக்கிகள்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாக முடியும். பாசிச ஜெயாவின் காலை நக்கும் திடீர் பணக்கார அரசியல் பொறுக்கிகள் இப்போது ''ஜனநாயகம்'' முறைப்படி நாடாளுமன்ற பட்டாபிஷேகத்திற்குத் தயாராகிறார்கள். அதற்காக, அவசரமாக அரசியல் அரிதாரம் பூசிக் கொள்கிறார்கள்.

●●●

பெரம்பலூரில் போட்டியிடும் முன்னாள் மத்திய மந்திரி ராஜா, திருச்செங்கோடில் போட்டியிடும் சுப்புலட்சுமி ஜெகதீசன், கிருஷ்ணகிரியில் போட்டியிடும் சுகவனம் போன்றோர் தி.மு.க.வில் ஸ்டாலின் கோஷ்டியில் இருப்பவர்கள். இதனால் வேட்பாளர் தகுதியில் வெற்றி பெற்றிருப்பவர்கள்.

●●●

தி.மு.க. கூட்டணி ராமதாசு, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 6 வேட்பாளர்களைக் களத்தில் இறக்கியிருக்கிறார்.

செங்கற்பட்டு தொகுதி பா.ம.க. வேட்பாளர் சங்கராச்சாரியின் சீடர் ஏ.கே. மூர்த்தி தவிர, தருமபுரி - டாக்டர் செந்தில், சிதம்பரம் - பொன்னுசாமி, அரக்கோணம் - ஆர்.வேலு மற்றும் புதுச்சேரி - பேராசிரியர் மு. ராமதாசு போன்றோர் படித்த 'பண்டிதர்'கள். ''டில்லிக்குச் செல்பவர்கள் ஆங்கிலப் புலமையோடு இருக்க வேண்டும்'' என்று இதற்கு விளக்கம் கொடுக்கிறார், ராமதாசின் மகன் அன்புமணி.

●●●

காங்கிரசு கூட்டணிக்குத் தாவியிருக்கும் வாஜ்பாய் ரசிகர் வை. கோபால்சாமி, ம.தி.மு.க. சார்பாக 4 வேட்பாளர்





படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசு தலைவர் கமல்நாத் படத்தைச் செருப்பால் அடித்துக் கொளுத்தும் வாசன் கோஷ்டி: பதவிக்காக நாய்ச்சண்டை.

களை இறக்கியிருக்கிறார். தம் கட்சியின் இரண்டாம் மட்ட தலைவர்களும் பி.ஜே.பி. ரசிகர்களாக இருப்பதால், எப்போது பி.ஜே.பி.க்கு ஓடுவார்களோ என்ற பதட்டத்தில் இருக்கிறார். 'தொப்பி'க்கு அடித்துக் கொள்ளும் குரங்குகளிடமிருந்து தப்பிக்க, தன் 'தொப்பி'யைக் கழட்டி எறியும் வியாபாரியாக 'தனக்கு எம்.பி. பதவியே இனி வேண்டாம்' என்றார்.

திருச்சி தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் எல்.கணேசன், சிறையிலடைக்கப்பட்ட வை.கோ.வை விடுவிக்க, டெல்லிக்கு ஓயாமல் தூது போனவர். தன் கட்சியினரால் ''கள்ளர் பேரவை கணேசன்'' என்று செல்லமாக சாதி பட்டத்துடன் அழைக்கப்படுபவர்.

வந்தவாசி தொகுதியில் போட்டியிடும் செஞ்சி ராமச்சந்திரன் ஊழலுக்காக தனது மத்திய மந்திரி பதவியை இழந்தவர்.

●●●

''மதச்சார்பின்மைக்கு ஆபத்து வந்துள்ளது'' என்று கண்டுபிடித்து காங்கிரசு முதுகில் ஏறிக் கொண்ட ''கம்யூனிஸ்ட்''டுகள், ''எங்களுக்கான இரண்டு தொகுதிகளைப் பெறவே கடும் பிரயத்தனமாகி விட்டது'' என்று ஜனநாயகக் கடமையாற்றியதில் பெருமூச்சுவிட்டு, வேர்வையைத் துடைத்துக் கொள்கின்றனர். கிடைத்த தொகுதியைக் காப்பாற்றிக் கொள்ள, எதிரிகள் வழியிலேயே மோதுகிறார்கள். சாதி, மத ரீதியாக வேட்பாளர்களைத் தேர்வு செய்ததுடன் நடிகைகளின் 'தொப்புள்' போஸ்டர்களிலேயே சுத்தி, அரிவாள் வரைந்து தங்கள் சின்னத்தைப் பிரபலப் படுத்துகின்றனர்.

நாகர்கோயில் தொகுதியில் 'மார்க்சிஸ்டு' கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பெல்லார்மின், அத்தொகுதியின் பதினொரு லட்சம் வாக்காளர்களில் அறுபது சதவீதத்திற்கு மேலிருக்கும் கிருத்தவ மதத்தைச் சேர்ந்தவர்; ஜெபக் கூட்டங்களை நடத்தும் பாதிரியார்களை மொத்தமாக வளைத்து, ஓட்டு வேட்டையாடுகிறார்.

கோவை, தென்காசி மற்றும் நாகர்கோயில், மதுரை என்று தலா இரண்டு தொகுதிகளில் ஓட்டுக் கட்சி பாணியில் வேட்டையில் இறங்கி விட்டனர், போலி கம்யூனிஸ்டுகள்.

●●●

பி.ஜே.பி.க்கு எதிரான ''மாபெரும்'' கூட்டணிக்குத் தலைமை தாங்கும் காங்கிரசுக் கட்சி, தலைவர்களின் சுமையைத் தாங்க முடியாமல் தள்ளாடுகிறது. வாக்காளர் எண்ணிக்கைக்கு அதிகமாக இருக்கும் ''கோஷ்டி'' வேட்பாளர் பட்டியலை வைத்துக் கொண்டு முழிக்கிறது, காங்கிரசு. காந்தியின் அகிம்சை கொள்கைகளை மக்களுக்கு போதிக்கும் இவர்கள், தங்கள் 'சீட்டு' பிரச்சினைகளை மட்டும் தெருச் சண்டையில்தான் தீர்த்துக் கொள்கிறார்கள்.

●●●

தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரண்டு பிரதானக் கூட்டணி கட்சிகளால் கழித்துக் கட்டப்பட்ட கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ''மக்கள் கூட்டணி'' அமைத்துள்ளன.



புதுப் பெரியவாளின் திருமுகம்
(விவரம் 2-ஆம் பக்கம்)

திருமாவளவன், கிருஷ்ணசாமி, சேதுராமன் மற்றும் கண்ணப்பன் அடங்கிய இக்கூட்டணியினர் தங்களை கூட்டணி ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளாத தி.மு.க.வை தொடர்ந்து சபிக்கின்றனர்.

தலித் விடுதலைக்கு, பார்ப்பனியத்தைவிட சாதி இந்துக்கள்தான் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர், என்றார் திருமாவளவன். இப்போது வன்னியர் சாதி வேட்பாளரைத்தான் பாண்டிச்சேரியில் நிறுத்தியிருக்கிறார்.

●●●

கோழியை எதிர்பார்த்து மசாலா அரைத்து வைத்துக் கொண்டு மக்களிடம் பம்முகின்றனர், ஓட்டுப் பொறுக்கிகள். கூட்டணி என்ற பெயரில் வாக்காளர்களை அமுக்க ஆளுக்கொரு கூடையுடன் அலைகின்றனர்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகள்: தாகம் தீரக் கானல் நீர்

ஒவ்வொருமுறை தேர்தல்கள் வரும்போதும் ஓட்டுக் கட்சிகள் மட்டும் வாக்காளர்களிடம் ஓடிவருவதில்லை. செய்தி ஊடகத்தின் சார்பாகவும் கூடவே உளவுத்துறை சார்பாகவும் கருத்துக் கணிப்பு நிறுவனங்களும் வருகின்றன. பொதுமக்களைப் பாதிக்கும், வாக்காளர்களின் அக்கறைக்குரிய பிரச்சினைகள் எவையெவை என்று கருத்துக் கணிப்புகள் நடத்துகின்றன.

ஓட்டுக் கட்சிகள் முன்வைப்பதைப் போல இலஞ்ச ஊழலோ, மதவெறி - வகுப்புவாதமோ, காஷ்மீரோ - தீவிர வாதமோ, ராமனுக்குக் கோவில் கட்டுவதோ - இந்துத்துவாவோ, இந்தியா - பாக் உறவோ வக்காளர்களின் முதன்மையான அக்கறைக்குரிய பிரச்சினைகள் என்று கருத்துக் கணிப்பு முடிவுகள் எதுவும் கூறவில்லை. மாறாக, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம் இவை தாம் தம்மை அதிகம் வாட்டும் இரண்டு பிரச்சினைகள் என்று கருதுவதாக ஆகமிகப் பெரும்பான்மையான வாக்காளர்கள் கூறுகின்றனர்.

எத்தனை ஆண்டுகளானாலும், எத்தனை தேர்தல்கள் வந்துபோனாலும் இந்தக் கருத்தில் மாற்றம் இல்லை. இது போதாதென்று அறுத்த காயத்தில் உப்பு போட்டுத் தேய்ப்பதைப் போன்று ஆட்குறைப்பு - ஆலைமூடல் காரணமாக வேலை இழப்பும், அரசின் அதிரடிக் கட்டண உயர்வு - வரிவிதிப்பு காரணமாக விலையேற்றமும் சேர்ந்திருக்கிறது. இவற்றோடு வறட்சியும் பஞ்சமும் அடிக்கடி வருகின்றன. விளைவு, வறுமை தாண்டவமாடுகிறது. மொத்தத்தில், வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. கூடிக் கொண்டே போகிறது.

வாக்காளர்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக ஓட்டுக் கட்சிகள் என்னதான் காட்டுக் கூச்சல் போட்டாலும், பொதுமக்களின் கோரிக்கை, அக்கறைக்குரிய பிரச்சினைகள் மாறவே இல்லை. அதனால்தான் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கை வெளியிடும் சடங்கின் போது ஓட்டுக் கட்சிகள் தவறாது இந்தப் பிரச்சினைகள் மீது சில வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றன.

**வாக்குறுதிகள் ஏராளம்**
**ஓட்டுக் கட்சிகளின் தாராளம்**

எதிர்க் கட்சிகள் ஒவ்வொன்றும் தாம் ஆட்சிக்கு வந்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம்; விலைவாசியைக் குறைப்போம் என்று வாக்குறுதிகள் தருகின்றன. ஆளும் கட்சிகளோ, இவ்வளவு பேருக்கு, அவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம், விலைவாசியைக் குறைக்க முடியவில்லை என்றாலும் கட்டுப்படுத்தியிருக்கிறோம். முதலீடுகள் அதிகமாகியிருக்கின்றன; தொழில்கள் பெருகியிருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் தருகின்றன.

வரும் 2004 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்கான கட்சிகளின் அறிக்கைகளில் எல்லாம் இதே போன்று வாக்குறுதிகள் நிரம்பி வழிகின்றன. ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற பச்சைப் பொய்யைப் பரப்பிவரும் பாரதிய ஜனதாக் கூட்டணி, ''ஏற்கெனவே ஒரு கோடிப் பேருக்கு வேலை கொடுத்துள்ளோம், மேலும் புதிதாக ஒரு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம். நுகர்பொருட்களின் விற்பனை பெருகியிருக்கிறது; மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரித்திருக்கிறது; வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வோரின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இவையெல்லாம் தமது ஐந்தாண்டு ஆட்சியின் சாதனை; இந்த வளர்ச்சி தொடரும்; 2020-க்குள் நமது நாட்டை மேல்நிலை வல்லரசாக மாற்றுவோம்'' என்று வாக்குறுதி தருகிறது.

இவற்றை அடியோடு மறுக்கும் எதிர்த்தரப்புக் கூட்டணியின் தலைமைக் கட்சியான காங்கிரசு வேறு சில வாக்குறுதிகள் தந்துள்ளது. குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டுக்கு நூறு நாட்கள் வேலை வாய்ப்புக்கு உறுதி கூறும் வேலை உத்திரவாதச் சட்டம் கொண்டு வரப்போவதாக வாக்குறுதி தருகிறது. அது தனது ஆறு அம்சத்திட்டத்தில் மூன்று அம்சங்கள் மக்களின் இன்றியமையாப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிவைக்கின்றன. அதாவது, இளைஞர்களுக்கு வேலை, கிராமப்புற வளர்ச்சி, பொருளாதார மறுமலர்ச்சி ஆகியன. இன்னும் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்துள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. மற்றும் இரண்டு 'கம்யூனிஸ்டு' கட்சிகள் கூட இது போன்று தத்தமது தேர்தல் அறிக்கைகளில் கூறுகின்றன.

இந்த ஆண்டு பொதுத் தேர்தல்களில் மட்டும்தான் இப்படிப்பட்ட வாக்குறுதிகளைப் பார்க்கிறோமா என்றால் கிடையாது. தேர்தலுக்குத் தேர்தல் நடக்கும் பல கேளிக்கூத்துகளில் இவையும் இடம் பெறுகின்றன. இவற்றைப் பாரிய அக்கறைக்குரியவை என்று எந்த ஓட்டுக் கட்சிகளாவது எடுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்த முயன்றிருக்கின்றனவா என்றால் அதுவும் கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாட்டைக் ''குடியரசு நாடு'' என்று அறிவித்து 1952-ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணய சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறையே பின்வருமாறு கூறுகிறது:

***அ. போதுமான அளவு வாழ்க்கைச் சாதனங்கள் - தேவைகளைப் பெறுவதற்கு குடிமக்களுக்கு (ஆண்களும் பெண்களும் சமஅளவில்) உரிமை உண்டு.***

***ஆ. பொது நலனுக்கு அதிகபட்சம் சேவை செய்யும் வகையில் சமுதாயப் பொருளாயத மூலாதாரங்களின் உடைமையும் கட்டுப்பாடும் பகிர்ந்தளிக்கப் படும்.***

***இ. பொது நலனுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செல்வமும் உற்பத்திச் சாதனங்களும் ஒரு சில இடங்களில் குவியும் தன்மையில் பொருளாதார அமைப்பு இயக்கப்படமாட்டாது.***

இந்த வாக்குறுதி கொடுத்து இந்தியக் குடியரசு பொன்விழாக் கொண்டாடி விட்டன. ஏறக்குறைய எல்லாக் கட்சிகளும் ஆட்சிக்கு வந்தன. ஆனால் இவற்றை செயல்படுத்தும் முயற்சிதான் இல்லை.



படிப்பகம்

## தேர்தலுக்குத் தேர்தல் தொடரும் மோசடிகள்




பா.ஜ.க.வின் தொலைநோக்குத் திட்ட ஆவணத்தை வெளியிடும் அக்கட்சியின் தலைவர்கள்: இந்தியாவை அமெரிக்காவின் முழு அடிமை நாடாக மாற்றும் சதித்திட்டம்!

அரசியல் சட்ட வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு நேரு தலைமையிலான காங்கிரசு கட்சி "சோசலிச பாணியிலான சமுதாயம் காண்பதே தனது இலட்சியம்" என்று 1956-ஆம் ஆண்டு ஆவடி மாநாட்டில் பிரகடனப்படுத்தியது. இதற்கு "ஜனநாயக சோசலிசம்" என்று காமராஜர் பெயர் சூட்டினார். அதாவது "அமெரிக்கா - பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ளதைப் போன்ற ஏகபோக முதலாளித்துவ சுரண்டல் - ஏற்றத்தாழ்வுகளும் இருக்காது; ருசியா - சீனா ஆகிய கம்யூனிச நாடுகளில் உள்ளதைப் போன்ற சர்வாதிகாரமும் இருக்காது. முன்னதில் உள்ள ஜனநாயக அரசியல் அமைப்பும், பின்னதில் உள்ள சமதர்மப் பொருளாதார அமைப்பும் இணைந்த ஜனநாயக சோசலிசம் அமைப்போம்; அதில் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், வறுமை இருக்காது" என்பது காங்கிரசின் வாக்குறுதி.

இதை "காகிதப்பூ மணக்காது, காங்கிரசு சோசலிசம் பலிக்காது" என்று கிண்டல் செய்து, நாடகம் போட்டு அம்பலப்படுத்தியது, தி.மு.க. சோசலிச பாணியிலான சமுதாயம் காணும் இலட்சியத்தைக் காங்கிரசு மேற்கொண்ட இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நேருவின் நேரடி வாரிசு இந்திரா "வறுமையை ஒழிப்போம்!" என்ற முழக்கத்தை முன்வைக்கும்படி நேர்ந்தது. இதுதான் காங்கிரசு சோசலிசத்தின் இலட்சணம். இந்திராவின் பதவிக்கு ஆபத்து வந்தபோது, அவசரநிலை ஆட்சியைப் பிரகடனம் செய்து, அரசியல் நிர்ணய சட்டத்தின் முகப்புரையில் இந்தியா ஒரு சோசலிச நாடு என்று பெயரும் சூட்டினார். இறுதியில் காங்கிரசு சோசலிசம் பலிக்காமலேயே காய்ந்து கருகிப் போனது.

வாக்குறுதிகளால் வாக்காளர்களை ஏய்த்து ஓட்டுப் பொறுக்குவதற்கு இன்னொரு சான்று 1967 பொதுத் தேர்தல்களின்போது தி.மு.க.வின் நிறுவனத் தலைவர் அண்ணாத்துரை அளித்த வாக்குறுதிகள். அவற்றுள் மிகவும் பிரபலமானது "ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி வழங்குவோம், இல்லையானால் முச்சந்தியில் நிறுத்திவைத்து சாட்டையால் அடியுங்கள்" என்றார், அண்ணாதுரை. இது சாத்தியமில்லை என்று தெரிந்ததும் "மூன்றுபடி இலட்சியம், ஒரு படி நிச்சயம்" என்று மாற்றிக் கொண்டார். ஆட்சிக்கு வந்தபிறகு, எதிர்க்கட்சிகளின் நெறுக்குதல் காரணமாக சென்னை, கோவை ஆகிய இரு நகரங்களில் மட்டும் சில மாதங்களுக்கு "ரேசன்" கடைகளில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டனர்; அப்புறம் அதுவும் காற்றில் பறந்து விட்டது.

இப்படித்தான், தேர்தல் அறிக்கையில் தரப்படும் வாக்குறுதிகள் எல்லாம் வெறுமனே தேர்தல்கால சவடால்கள் தாம் என்பது மரபாகவும் யதார்த்தமாகவும் ஆகிப்போனது. தேர்தல் வாக்குறுதிகள் வெறும் கேளிக் கூத்தாகவும் ஆகிவிடுவதுண்டு. "பேரறிஞர்" என்று போற்றப்படும் அண்ணாத்துரை கடல் பாசியில் இருந்து அல்வா தயாரித்துத் தருவோம் என்று வாக்குறுதி வழங்கினார். 1982-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தல்களின்போது, மாநில அரசின் அதிகார வரம்புக்குள் வராத "அஞ்சல் அட்டை மற்றும் இரயில் கட்டணத்தைக் குறைப்பேன்" என்று வாக்குறுதி கொடுத்தார், எம்.ஜி.ஆர்.

ஒருமுறை அண்ணாயிசம்தான் தனது சித்தாந்தம் என்று அறிவித்த, எம்.ஜி.ஆர். அதற்கு, "அண்ணாயிசம் என்றால் கம்யூனிசம், கோடலிசம் (முதலாளியம்), சோசலிசம் ஆகியவை இணைந்தது" என்றும் பொருள் விளக்கமும் கொடுத்தார். எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக வந்த ஜெயலலிதாவோ, விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்ய மாட்டோம்; "ரேசன்" அரிசி விலையை உயர்த்தமாட்டோம் என்று கூறி ஓட்டுக்களை பொறுக்கிக் கொண்டு போன ஓரிரு மாதங்களிலேயே நேரெதிரான நடவடிக்கைகளில் இறங்கினார். கோவில்களில் ஆடு - கோழி வெட்டத் தடைவிதித்து போலீசை ஏவினார்; அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் உரிமைகளைப் பறித்ததோடு, போராடியவர்களைத் தாக்கி, எண் ராசி பார்த்து 999 பேரை வேலை நீக்கம் செய்தார். நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கியதும் அந்தத் தடைச்சட்டத்தை இரத்து செய்ததோடு, இந்த அரசு ஊழியர்கள் வேலை நீக்கத்தையும் இரத்து செய்தார்.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அணியினரோ தாம் ஆட்சிக்கு வந்தால்தான் சிறுபான்மையினர் பாதுகாப்பாக வாழமுடியும் என்று உத்திரவாதம் கொடுத்தனர். ஆனால், அவர்கள் ஆட்சி நடத்தும் குஜராத்தில்தான் ஆயிரக்கணக்கான இசுலாமியர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர்; இசுலாமியப் பெண்கள் கும்பல் பாலியல் வன்முறைக்குப் பலியாயினர்.

ஆக, தேர்தல் வாக்குறுதி என்றால் நேரு, இந்திரா, அண்ணாதுரை போன்ற அரசியல் வித்தகர்கள் வெறுமனே வாக்காளப் பெருமக்களை ஈர்ப்பதற்கு முன்வைக்கும் கவர்ச்சி முழக்கங்களா? இல்லை, எம்.ஜி.ஆரைப் போன்று சொந்த புத்தியும் இல்லாத, சுயபுத்தியும் இல்லாத கவர்ச்சி நாயகர்களின் உளறல்களா? இல்லை, ஜெயலலிதா - அத்வானி போன்ற பாசிச அரசியல் பித்தலாட்டக்காரர்கள் வேண்டுமென்றே செய்யும் மோசடிகளா?

### வழிவகைகளோ, திட்டங்களோ இல்லாத வாக்குறுதிகள்

வாக்காளர்கள் தமது வாழ்வின் உயிராதாரமான, அக்கறைக்குரிய பிரச்சினைகள் என்று கருதும் விவகாரங்களில் ஓட்டுக் கட்சிகள் எத்தனை அலட்சியமாகவும் வெட்கக்கேடாகவும் நடந்து கொள்ளுகின்றன பாருங்கள்! காரணமென்ன? இந்தக் கட்சிக்கு வாக்களித்தால், அவர்கள் தரும் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றவாறு ஒப்பந்தம் எதுவும் கிடையாது. கம்பெனி - நிறுவனச் சட்டத்தில் உள்ளதைப்



படிப்பகம்

www.padippakam.com

போல ஒப்பந்த மீறல், நம்பிக்கைத் துரோகம் என்று குற்றஞ்சாட்டி, வழக்குப்போட்டு, ஓட்டுக் கட்சியினரைத் தண்டிக்கவும் முடியாது.

ஆனால், தேர்தல் வாக்குறுதிகளைக் கேட்கும் வாக்காளர்களுக்கோ, இதுபற்றியெல்லாம் ஏமாற்றப்படுகிறோம் என்கிற ஆத்திரமோ, கோபமோ கூட ஏற்படுவதில்லை. சாதாரண ஏழை - எளிய மக்களிடம் ஒருவித சலிப்பும், படித்தவர்களிடையே கேலியும் கிண்டலும் தான் மேலிடுகின்றன. ''அரசியலில் இதெல்லாம் சகஜம்'' என்று ஆகிப்போன விசயங்களில் இதுவும் ஒன்றாகி விட்டது.



''வீட்டுக்கு ஒருவருக்கு வேலை'' என்று இந்தியக் குடிமகனின் காதில் பூ சுற்றும் காங்கிரசின் தேர்தல் அறிக்கையை வெளியிடும் சோனியா.

அரசியலில் சாதி, மதம், இனம், மொழி, பிராந்திய உணர்வு இப்படிப் பல்வேறு பிரச்சினைகளைப் பயன்படுத்திக் கொண்டு, ஓட்டுக் கட்சிகள் தமக்கு விசுவாசமான ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதுண்டு. அப்படி நிரந்தரமான, விசுவாசமான ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்குக் கூட பொருளாதார ரீதியிலான தமது தேர்தல் வாக்குறுதிகளை அவை நிறைவேற்றிக் கொடுப்பதில்லையே, ஏன்? பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, அவை நிறைவேற்றப்படாமல் இருப்பது தொடருமானால் தமது நம்பகத்தன்மையே பறிபோய்விடும் என்று ஓட்டுக்கட்சிகள் கவலைப்படுவதில்லையே, ஏன்?

வேலை வாய்ப்புகளைப் பெருக்குவோம், விலைவாசியைக் குறைப்போம், வறுமையை ஒழிப்போம், பொருளாதாரத்தை மேம்படுத்துவோம் என்றெல்லாம் இலக்கும் - எண்ணிக்கையும் குறித்து வாக்குறுதிகள் வீசப்படுகின்றன. இந்தத் தேர்தல் அறிக்கைகளில் தமது வாக்குறுதிகளை ஈடேற்றும் வழிவகைகள், பொருளாதாரத் திட்டங்கள் எதுவுமே இருப்பதில்லை. மொட்டையான வாக்குறுதிகள் மட்டுமே உள்ளன.

இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விவகாரம். தேர்தல் அறிக்கைகளில் பொருளாதார வாக்குறுதிகளைச் சேர்ப்பதற்கு முன்பும் சரி, தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும் சரி, அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் - திட்டங்கள் பற்றி எந்த ஓட்டுக் கட்சியும் அக்கறைப்படுவதில்லை. அடுத்த தேர்தல்களின்போது பார்த்துக் கொள்ளலாம், மக்கள் மறந்துவிடுவார்கள், வேறு ஏதாவது வாக்குறுதிகள் கொடுத்து சமாளித்துக் கொள்ளலாம் என்று இருந்து விடுகின்றன. செய்தியாளர்களோ எதிர்க்கட்சிகளோ நினைவுபடுத்தினால் முந்தைய ஆட்சியின் தவறுகளால் ''கஜானா காலி'' ஆகிவிட்டது அல்லது வறட்சி - வெள்ளம் போன்ற இயற்கை பாதிப்புகளால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுவிட்டன என்று கூறித் தட்டிக் கழித்து விடுகின்றன.

ஒரு உண்மை ஊரறிந்த இரகசியம். வாஜ்பாய் - அத்வானியோ, சோனியோவோ, கருணாநிதியோ, ஜெயலலிதாவோ - இப்படிப் பெரிய அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றும் பொருளாதார நிபுணர்கள் அல்ல. கட்சியிலும் அரசியலிலும் வெளியிலும் உள்ள ''பொருளாதார நிபுணர்கள்'' கூறும் ஆலோசனைகளைப் பரிசீலித்து, சோதித்தறிந்து முடிவுகாணும் தகுதியுடையவர்கள் கூடக் கிடையாது. பொருளாதாரம் கற்றவர்கள் ஒருசிலர் இந்தக் கட்சிகளில் இருந்போதும், நிதி, தொழில், வணிக அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் இருந்த போதும் தேர்தல் வாக்குறுதிகள் தயாரிப்பில் இப்படிப்பட்டவர்கள் முக்கியப் பங்கு வகிக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஏனென்றால் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குப் பொருளாதார அறிவு அவசியமில்லை. போட்டி போட்டுக் கொண்டு மக்களை ஈர்க்கும் வகையிலான கவர்ச்சிகர வாக்குறுதிகள் தயாரிப்பவர்கள்தாம் ஓட்டுக் கட்சிகளுக்குத் தேவை.

காங்கிரசு அணியில் மன்மோகன் சிங், பிரணவ முகர்ஜி, ப. சிதம்பரம் ஆகியோரும் பா.ஜ.க.வில் யெஸ்வந்த்சிங், ஜஸ்வந்த்சிங் ஆகியோரும் நிதி அமைச்சர்களாக இருந்திருந்தாலும், அரசின் திட்டங்களும் ஆண்டு வரவு - செலவு அறிக்கைகளும் தயாரித்து அமலாக்குவதில் இவர்களின் பங்கு சட்டபூர்வமானது, சடங்குபூர்வமானதுதான்.

> **வாஜ்பாய் - அத்வானியோ, சோனியோவோ, கருணாநிதியோ, ஜெயலலிதாவோ - இப்படிப் பெரிய அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றும் பொருளாதார நிபுணர்கள் அல்ல என்ற உண்மை ஊரறிந்த இரகசியம்.**

### ஆட்சியாளர்கள் மாறினர்; பொருளாதார அடிப்படை மாறவில்லை, ஏன்?

1952-77 ஆகிய ஒரு 25 ஆண்டுகள் மத்தியில் காங்கிரசு ஆட்சி நடந்தத. அதன்பிறகு ஒரு 10 ஆண்டுகளுக்கு ஒரே கட்சி அல்லது ஒரே அணி ஆட்சி என்பது கூடக் கிடையாது. நிதி, வர்த்தகம், தொழில், விவசாயம், உணவு போன்ற துறைகளில் ஒருவரே தொடர்ந்து மூன்றாண்டுகள் அமைச்சராக நீடிப்பது என்பது சாதனைதான். இப்படி ஆட்சிகளும் அமைச்சகங்களும் மாறிமாறி வந்து போனாலும் நாட்டின் பொருளாதாரத் திட்டமிடல்களில் எப்




படிப்பகம்

www.padippakam.com

போதாவது திடீரென்றோ, அடியோடோ மாற்றங்கள் நடந்ததும் இல்லை. அவையெல்லாம் தொடர்ச்சியாக ஒரே முறையில், ஒரே முறையில் தான் இயங்கி வருகின்றன. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும்; பல சமயம் ஒரு சில நிமிடங்களில் 20, 30 பொருளாதாரத் தீர்மானங்கள் எவ்வித விவாதமும், எதிர்ப்புமில்லாமல் நிறைவேறி வருவதையும் காண்கிறோம்.

இதற்குக் காரணம் விஞ்ஞான சோசலிசம் பேசும் போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்து காங்கிரசு - பா.ஜ.க. ஆகிய பார்ப்பன - பனியா ஆளும் கட்சிகள் வரை ஓட்டுக் கட்சிகளிடையே நாட்டின் பொருளாதாரத் திட்டமிடுதல்களில் அடிப்படை வேறுபாடுகள் எதுவும் கிடையாது. எனவேதான், பூமியின் சுற்றுப்பாதையில் விடப்பட்ட விண்வெளி ஓடத்தைப் போல எவ்விதத் தடங்களுமின்றி, ஏற்கெனவே வரையறுக்கப்பட்டவாறு நாட்டின் பொருளாதாரத் திட்டமிடுதல்கள் ஒரே திசையில், ஒரே பாதையில் சுற்றிக் கொண்டே இருக்கிறது. இந்த இயக்கத்தில் கடந்த 55 ஆண்டுகள் நடந்த ஒரே ஒரு குறிப்பிடத்தகுந்த மாற்றம் இதன் முழுமையான நேரடியான கட்டுப்பாட்டை உலக வங்கி, சர்வதேசநிதி நிறுவனம், உலக வர்த்தகக் கழகம் மற்றும் பன்னாட்டு ஏகபோகத் தொழில் கழகங்களின் அதிகாரிகள் தற்போது கையிலெடுத்துக் கொண்டார்கள்.



தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை: இன்னுமொரு காகிதக் குப்பை.

கடந்த பல ஆண்டுகளாக நாட்டின் அரசியல் பொருளாதாரத் திட்டமிடுதல்கள், ஆண்டு வரவு - செலவு அறிக்கைகள் மற்றும் அவை செயல்படுத்தப்படும் முறைகளைக் கவனித்தாலே சில உண்மைகள் தெளிவாக விளங்கும். பிரதம மந்திரியைத் தலைவராகவும், ஒரு பிரபல அரசியல்வாதி அல்லது முன்னாள், இன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் துணைத் தலைவராகவும் கொண்ட திட்ட ஆணையம் ஒன்றிருக்கிறது; ஒவ்வொரு அமைச்சரவை பதவியேற்கும் போதும் இந்த ஆணையம் திருத்தி அமைக்கப்படுகிறது; இந்த ஆணையத்து அமைச்சரவைப் பொறுப்பு என்கிற முறையில் ஒரு அமைச்சகமும் உண்டு. அமைச்சகத்தின் கீழும், ஆணையத்தின் கீழும் பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் துறைசார்ந்த நிர்வாக அதிகாரிகளும் உண்டு. இதேபோன்று மாநில அளவில் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநிலத் திட்டக் கமிசன்களும் உண்டு.

இந்தத் திட்ட ஆணையம் மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள பல்வேறு துறை சார்ந்த அமைச்சகங்களிடமிருந்து ஏற்கெனவே அமலாக்கப்பட்டு வரும் திட்டங்கள், புதிய திட்ட ஆலோசனைகள் குறித்த அறிக்கைகள் பரிந்துறைகளைச் சேகரித்து, பரிசீலித்து, சில சில்லறைத் திருத்தங்கள் செய்கின்றது. அதேபோன்று மாநிலத் திட்ட ஆணையங்கள் வெவ்வேறு துறைகளிடமிருநது அறிக்கைகள் பெற்று, பரிசீலித்து, சில சில்லறைத் திருத்தங்கள் செய்கின்றன. இந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளை அரசுக்குப் பரிந்துரைக்கின்றன. துறை சார்ந்த அதிகாரிகள் மாநிலத் திட்ட ஆணையங்களிடமும் அதேபோல மாநில செயலர்கள் - அதிகாரிகள் பங்கேற்புடன் மாநில முதலமைச்சர் - நிதி அமைச்சர்கள் மத்திய திட்ட ஆணையத்திடமும் கோரிக்கைகள் - முறையீடுகளை முன்வைத்து நிதி ஒதுக்கீடுகள் பெறுகிறார்கள். மத்திய, மாநில நிதி அமைச்சகங்கள் திட்ட ஆணையங்களின் பரிந்துறைகளை ஏற்று, முடிவு செய்து ஒப்புதல் அளிக்கின்றன.

மத்திய, மாநில அரசுகளின் ஆண்டு வரவு - செலவு மற்றும் திட்ட அறிக்கைகளும் இவ்வாறுதான் தயாரிக்கப்படுகின்றன. அரசின் வெவ்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறை சார்ந்த செயலாளர்கள், இயக்குநர்கள் மற்றும் வாரியங்களிடமிருந்து முந்தைய ஆண்டு வரவு - செலவு அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை நிதி அமைச்சகம் சேகரிக்கிறது. பெரும்பாலும் இந்த அறிக்கைகள் கடந்த ஆண்டு வரவு - செலவில் வெவ்வேறு இனங்களுக்கான திட்ட மற்றும் செலவு மதிப்பீடு ஒப்பீட்டு ரீதியில் உயர்த்தப்படும் அல்லது குறைக்கப்படும். இவற்றைத் தொகுத்து சில சில்லறை மாற்றங்கள் செய்து நிதி அமைச்சக அதிகாரிகள் ஆட்சியாளர்கள் முன்வைக்கிறார்கள் அவை அமைச்சரவையாலும் பின்னர் சட்டமன்றங்கள் அல்லது நாடாளுமன்றத்தாலும் நிறைவேற்றப்படுகிறது.

அமைச்சரவை, சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்ற ஒப்புதலைப் பெற்றே இவையெல்லாம் நடைமுறைக்கு வருகின்றன என்பதால் மக்கள் பிரதிநிதிகள்

**இந்தக் கட்சிக்கு வாக்களித்தால், அவர்கள் தரும் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றவாறு ஒப்பந்தம் எதுவும் கிடையாது. ஒப்பந்த மீறல், நம்பிக்கைத் துரோகம் என்று குற்றஞ்சாட்டி, வழக்குப்போட்டு, ஓட்டுக் கட்சியினரைத் தண்டிக்கவும் முடியாது.**



என்று கூறிக்கொள்ளும் ஓட்டுக் கட்சிக்காரர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் இவற்றில் வேண்டுமான மாற்றங்கள் செய்து விட முடியும் என்றும் கருதிவிட முடியாது. வரவு - செலவு கணக்குகள், அறிக்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகள் அனைவரையும் தாண்டி எந்தவொரு விவரத்தையும் "மக்கள் பிரதிநிதிகள்" பெற்று விட முடியாது; மாற்றத்தையும் செய்து விடமுடியாது. ஏற்கெனவே நிலவி வரும் நாட்டின் பொருளாதார ஒழுங்கு அமைப்பையும் போக்கையும் கட்டிக் காத்துப் பராமரிக்கும் வகையில் தான் அரசு அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டு செயல்படுகிறார்கள்.

இவைபற்றிய முழுமையான கண்ணோட்டமும் நோக்கமும் இல்லாத "மக்கள் பிரதிநிதிகள்" முக்கிய மாற்றங்கள் எதையும் செய்து விடமுடியாது. மக்கள் பிரதிநிதிகளுக்கு இவ்வாறான அதிகார, அறிவு வரம்புகள் போடப்பட்டிருக்கும். அதேசமயம் ஒவ்வொரு வரவு - செலவு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும் பொழுதும் நாட்டின் பெருமுதலாளிகள் மற்றும் அவர்களின் சங்கப் பிரதிநிதிகள் நிதி அமைச்சகத்துக்குத் தவறாமல் அழைக்கப்பட்டு, ஆலோசனைகளும் பரிந்துரைகளும் கேட்டுப் பெறப்படுகின்றன. அவை நிச்சயமாக அரசின் வரவு - செலவு மற்றும் திட்ட அறிக்கைகளில் இடம் பெறுகின்றன.

ஆகவே, நாட்டு மக்களின் பொருளாதாரக் கோரிக்கைகளை யாராவது விரும்பினால் கூட தீர்க்கப்பட முடியாததற்கு காரணத்தை அறிய வேண்டுமானால் இவ்வளவு காலமும் கட்டிப் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வரும் நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்பையும் அதன் போக்கையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**தேர்தல் வாக்குறுதி என்றால் நேரு, இந்திரா, அண்ணாதுரை போன்ற அரசியல் வித்தகர்கள் வெறுமனே வாக்காளப் பெருமக்களை ஈர்ப்பதற்கு முன்வைக்கும் கவர்ச்சி முழக்கங்களா? கவர்ச்சி நாயகர்களின் உளறல்களா? பாசிச அரசியல் பித்தலாட்டக்காரர்கள் வேண்டுமென்றே செய்யும் மோசடிகளா?**

### இந்த நச்சு மரத்தை நட்டு வளர்த்தது யார்?

நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்பானது நவீன இந்தியாவின் நிர்மாணச் சிற்பி பண்டித ஜவகர்லால் நேருவின் மூளையில் உதித்த உன்னதமானது; முதலாளித்துவ நாடுகளிலோ, கம்யூனிச சோசலிச நாடுகளிலோ, உலகின் வேறெந்த நாடுகளிலுமோ இல்லாத ஒரு பொருளாதார ஒழுங்கமைப்பு. இதைத்தான் தற்போது, உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு பொருத்தமாக சீர்திருத்தியமைக்கப்படுகிறது என்று நாட்டு மக்களுக்குப் போதிக்கப்படுகிறது. அரைக்கிணறு தாண்டுவதைப் போல இதில் ஓரளவு, ஓரளவுதான் உண்மை இருக்கிறது.

"சுதந்திர இந்தியா"வில் எத்தகைய அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்கிற விவகாரம் 1930-களிலேயே காங்கிரசுக்குள் எழுந்தது. நேருவின் தந்தை மோதிலால் நேரு தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி, 1935-இல் ஆங்கிலேய அதிகாரிகள் மாண்டேகு செம்ஸ்போடு தயாரித்தளித்த இந்திய அரசியல் அமைப்புக்கான திட்டத்தையே மறுபதிப்பு செய்து முன்வைத்தது. இதைத்தான் சில திருத்தங்களுடன் 1952-ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சட்டமாக 'சுதந்திர இந்தியா' ஏற்றுக் கொண்டது.

அதேபோலத்தான், ஆங்கிலேயக் காலனியவாதிகள் உருவாக்கிச் செயல்படுத்தி வந்ததுதான் இந்த நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்பும் திட்டமிடுதலும். ஆனால் இதற்கு மாறாக, "ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ஒன்றியத்தின் எட்டாண்டுத் திட்டமிடுதல் முறையால் உற்சாகம் பெற்ற நேரு வகுத்துக் கொடுத்ததுதான் இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம்; அதிலிருந்த கம்யூனிச சர்வாதிகாரத் தன்மை நீக்கப்பட்டு, ஜனநாயகத் திட்டமிடுதலாக வகுக்கப்பட்டுள்ளது என்றும் அரசுத் துறை முதலீடுகள் - தொழில்களையும் இது உள்ளடக்கியிருப்பதால் இதுவே சோசலிசப் பண்பு கொண்டதாகவும் இருக்கிறது" என்றும் இங்கே போதிக்கப்படுகிறது; நேரு பரம்பரையின் வாரிசான இந்திரா, 1970-களின் ஆரம்பத்தில் வங்கிகள், தொழில்களை அரசுடமையாக்கினர்; அது நாட்டை சோசலிசத்துக்குக் கொண்டு செல்வது என்று போலி கம்யூனிஸ்டுகள் கூட ஏற்றிப் போற்றினர்.

ஆனால், ஆண்டுக் கணக்கு வைத்து அரசு மையத்திட்டமிடுதல், அரசுத் துறை - பொதுத்துறை முதலீடுகள் - தொழில்கள் என்ற இந்த பொருளாதார ஒழுங்கமைப்பும் தேசியமயமாக்கலும் நேரு - இந்திரா பரம்பரையின் கண்டுபிடிப்போ, சாதனையோ அல்ல. இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி வந்த ஆங்கிலேயக் காலனியவாதிகளே திட்டமிட்டுப் புகுத்தியவைதாம்.

கட்டாய வரிவசூல் செய்வதற்காக தஞ்சை ஏழை விவசாயிகளை வறண்ட காவிரியின் மணற்பரப்பில், கொளுத்தும் சித்திரை வெயிலில் அரை நிர்வாணமாக நிறுத்தி வைத்து, பிரம்பால் அடித்துத் துன்புறுத்திய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வகுத்துக் கொடுத்த பொருளாதார ஒழுங்கமைப்பு மற்றும் திட்டமிடுதலைத்தான் "சுதந்திர இந்தியா"வின் ஆட்சியாளர்கள் தொடர்ந்து பாதுகாத்துப் பராமரித்து வருகிறார்கள். இதை இப்படியே வைத்துக் கொண்டு இதைப் பயன்படுத்தி இந்த நாட்டு மக்களின் நலன்களுக்குச் சேவை செய்வோம் என்று ஓட்டுக் கட்சிகள் வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றன. இந்த உண்மைகள் குறித்து ஆதாரபூர்வமாகப் பிறகு பார்ப்போம்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com




## படியுங்கள்

# ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யக் கனவைத் தகர்த்தெறிவோம்!

*வெளியீடு:*

*ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.*

பக்கங்கள்: 80

*விலை: ரூ. 10/-*

தேர்தல் போதையில் ஆழ்த்தப்படும் தமிழ் மக்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது, பார்ப்பன - பாசிச கொடுங்கோலாட்சி எனும் பேரபாயம். பார்ப்பன - பாசிச ஆட்சியை நிறுவ முழு மூச்சோடும் வெறித்தனத்தோடும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, ஆர்.எஸ்.எஸ்.-ம் அதன் பரிவாரங்களும் மற்றும் இவைகளின் தொழிற்சங்க, இலக்கிய, பண்பாட்டு அமைப்புகள் முதலான பல பத்துக்கணக்கான அமைப்புகளும்.

இவை தவிர சங்கராச்சாரி - ஜெயலலிதா - சோ - சுப்பிரமணியசாமி - வெங்கட்ராமன் - எம்.எஸ். சுவாமிநாதன் போன்றோர் அடங்கிய பார்ப்பன கும்பலும் அவாளின் பத்திரிகைகளும் பார்ப்பனமயமாக்கலில் முன்னணியில் நிற்கின்றன. இந்நிலையில்...

பார்ப்பனமயமாக்கம் என்றால் என்ன? பாமர மக்களின் பக்தியில் பார்ப்பன பாசிசம் எவ்வாறு பதுங்கியிருக்கிறது? இந்து வெறி பாசிசத்தின் சித்தாந்தம் என்ன? செயல்திட்டங்கள் என்ன? தேர்தலில் பார்ப்பன ஜெயாவையும் பாரதீய ஜனதாவையும் தோற்கடித்து விட்டால், பார்ப்பன பாசிசம் ஒழிந்து விடுமா? பகிரங்க ஆயுதப் பயிற்சியோடு பாசிச குண்டர் படை மட்டுமின்றி, சாமியார்படை, கோயபல்சு படை, 'சமூக சேவை' படை கட்டிக் கொண்டு எதிரிகள் களத்திற் நிற்கும்போது, நாம் செய்ய வேண்டியது என்ன? அதற்கான செயல்திட்டங்கள் என்ன?

- ஆகியனவற்றைத் தொகுத்து விளக்குவதோடு, பார்ப்பன பாசிசம் குறித்து எச்சரிக்கை விடுத்து, போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் நூல்.

**நூல் கிடைக்குமிடம்:**


இரா. சீனிவாசன்,
எண்: 4, ஐந்தாவது தெரு,
செகந்நாதபுரம், சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
110, இரண்டாவது தளம்,
63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மற்றும் அனைத்து
ம.க.இ.க., வி.வி.மு.,
பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.
கிளைகள்.

## தேர்தல் புறக்கணிப்பு:

# சுரங்கத் தொழிலாளர்களின் முன்னுதாரணம்



கோலார் தங்கவயல் சுரங்கம் மூடப்பட்டு மூன்றாண்டுகளுக்கும் மேலாகி விட்டது. இதுநாள் வரையில் தொழிலாளர்களுக்கு சம்பளமோ, நட்டஈடோ எதுவுமே வழங்கப்படவில்லை.

இதன் விளைவாக, கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொண்டும், மருத்துவம் பார்க்கப் பணமின்றி நோய்நொடியாலும் 45-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த மூன்றாண்டுகளில் மாண்டு போயுள்ளனர். வேலையிழந்து வாழ்விழந்த தொழிலாளர்கள் பெங்களூர் மற்றும் பிற நகரங்களுக்கு ஓடி, கூலி வேலைக்கும் வாட்ச்மேன் வேலைக்கும் கொத்தடிமைகளாக உழல்கின்றனர்.

அடிபட்ட காயத்தின் மீது உப்பையும் மிளகாய்ப் பொடியையும் வைத்து தேய்த்தது போல, தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி மட்டுமின்றி எவ்வித அடிப்படை சுகாதார வசதியும் செய்து தராமல் கர்நாடக மாநில அரசு நிறுத்தியுள்ளது. குப்பைகளும் கழிவுகளும் சாக்கடையும் அகற்றப்படாமல், முடை நாற்றத்தின் நடுவே தொழில்லாளர் குடும்பங்கள் வாழ்க்கை ஓட்டுகின்றன.

ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களோ, "வாஜ்பாயியைப் பார்த்து விட்டேன்; இதோ, ஒரு வாரத்தில் தொகை வந்துவிடும்" என்றெல்லாம் தொழிலாளர்களிடம் கதையளந்து வந்தனர். ஆனாலும் இன்று வரை சல்லிக்காசு கூட கிடைக்கவில்லை.

இத்தனை காலமும் இந்த மோசடிகளையும் கொடுமைகளையும் சகித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள், இப்போது தேர்தல் நெருங்கியதும் வெகுண்டெழுந்தார்கள். வேலையுரிமையையும் வாழ்வுரிமையையும் மனித உரிமையையும் பறித்து நம்மை வீதியிலே வீசியெறிந்து இந்த அரசு புறக்கணிக்கும்போது, அது நடத்தும் தேர்தலை மட்டும் நாம் ஏன் அனுமதிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினர்.

இனி எந்தவொரு ஓட்டுப் பொறுக்கியையும் ஊருக்குள் விடக் கூடாது; தேர்தல் நடத்தவும் அனுமதிக்கக் கூடாது என்று தீர்மானித்து, கடந்த மார்ச் 24-ஆம் தேதியன்று ஆயிரக்கணக்கான பெண்கள் உட்பட 10,000-க்கும் அதிகமானோர் திரண்டு தேர்தல் புறக்கணிப்பு ஊர்வலத்தை எழுச்சியுடன் நடத்தினர். ம.க.இ.க., தலித் அமைப்புகள், மகளிர் அமைப்புகள், தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்டு பல்வேறு அமைப்புகளும் பெருந்திரளான தொழிலாளர் குடும்பங்களும், பங்கேற்ற இந்த ஊர்வலத்தில், எந்தவொரு ஓட்டுப் பொறுக்கியையும் தொழிலாளர்கள் அனுமதிக்கவில்லை. தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு, தாமே தலைமையேற்று நடத்திய இந்தத் தேர்தல் புறக்கணிப்பு ஊர்வலம், போலி ஜனநாயகத் தேர்தல் முறைக்கு விழுந்த மரண அடி. இனி கோலார் சுரங்கத்திலேயே இப்போலி ஜனநாயகத்துக்குச் சமாதி கட்டுவதென்பது, வர்க்க உணர்வுள்ள புரட்சிகரத் தொழிலாளர்களின் கரங்களில்தான் உள்ளது.

*தகவல்:*
*பு.ஜ. செய்தியாளர்கள்,*
*கோலார் தங்கவயல்.*

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
Regn.No.TN/PMG(CCR)/621/03-05
www.padippakam.com

# 2004 - தேர்தல் திருவிழா!

## ஓட்டுக் கட்சிகளின் கூத்து!

★ **11,568 கோடி ரூபாய்**

- ஓட்டுக் கட்சிகளின் மொத்த செலவு.

இது, பல மாநிலங்களின் ஆண்டு பட்ஜெட்டை விட அதிகம். மைய அரசு செலவிடும் ஆண்டு கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை விட அதிகம்.

★ **882 கோடி ரூபாய்**

- 280 லட்சம் தொண்டர்களைத் திரட்டி, ஓட்டுப் பொறுக்குவதற்கான செலவு.

★ **540 கோடி ரூபாய்**

- கொடிகள் தோரணங்களுக்கான செலவு.

★ **650 கோடி ரூபாய்**

- போக்குவரத்துக்கு.

★ **100 கோடி ரூபாய்**

- 40 ஹெலிகாப்டர்கள் 20 விமானங்களில் தலைவர்கள் பயணம் செய்ய செலவு.

★ **650 கோடி ரூபாய்**

- ஒன்றரை இலட்சம் வாகனங்களை பயன்படுத்துவதற்கு.

★ **300 கோடி ரூபாய்**

- பேரணிகள் செலவு.

படிப்பகம்